Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 356 | வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 02, திங்கள் 18.11.2013


மழைக்கான சாத்தியம் உண்டு.

25°C 24°C

# எமது உறவுகள் எங்கே? அரசே பொறுப்புக் கூறு

## கார்த்திகைத் திருநாளில் வவுனியாவில் கொதித்தெழுந்தனர் மக்கள்

வவுனியா, நவம்பர் 18

காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை அரசை பொறுப்புக்கூற வலியுறுத்தியும், சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியும், தமிழர் தாயகத்தில் இராணுவத்தின் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் நேற்று வவுனியாவில் மாபெரும் தீப்பந்தப் போராட்டம் நடைபெற்றது.

"கார்த்திகைத் திருநாளில் வீடுகளில் ஏற்றுகின்ற தீபத்தை நாங்கள் இன்று கைகளிலும் நெஞ்சங்களிலும் ஏந்தி எங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறோம்" என்று இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விண்ணதிரக் கோஷமிட்டனர்.

கொழும்பில் இடம்பெற்ற பொதுநல வாய மாநாட்டின் இறுதிநாளான நேற்று இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும்,




சர்வதேச தலைவர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடனும் வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழு மற்றும் வவுனியா மாவட்ட காணாமற்போன உறவுகளைத் தேடும் சங்கம் ஆகியவற்றால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கார்த்திகை தீபத் தீருநாளான நேற்று வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு முன்னால் முற்பகல் 11மணிக்கு 21

## மக்களை பிளவுபடுத்த வேண்டாம்



கொழும்பு, நவ.18

இலங்கை மக்களைப் பிளவுபடுத்த வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார்.

அங்கு தொடர்ந்தும் 21

## நிரந்தர - சமத்துவமான அபிவிருத்தி: கொழும்பு பிரகடனத்தில் வலியுறுத்து

### நிறைவடைந்தது பொதுநலவாய மாநாடு

கொழும்பு, நவ.18

இலங்கையில் நிகழ்ந்த பொதுநல வாயத் தலைவர்களின் மாநாட்டில் நேற்று 'கொழும்பு பிரகடனம்' வெளியிடப்பட்டது. நிரந்தரமான - சமத்துவமான அபிவிருத்தி இதில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

வறுமை, உணவுப்பாதுகாப்பு, காலநிலை மாறுபாட்டைத் தணித்தல், வர்த்தகத்தில் நிலவும் பற்றாக்குறை, உறுதிப்படுத்தப்படும் போதிய நிதிகள், முதலீடு, அறிவு, தொழில்நுட்பப் பரிவர்த்தனை, உலக ரீதியிலான பொருளாதார - வர்த்தக முறைமையை சமத்துவமாக உயர்த்துதல் ஆகியவற்றுக்கு உதவும் பொருட்டு உலக ரீதியிலான கொள்கைகளை மேம்படுத்துவதற்கான பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வர் என இப்பிரகடனத்தில் பொது நலவாயத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். உலக நிதி நிலைமை, பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றின் தாக்கம், குறிப்பாக வளர்முக நாடுகளின் அபிவிருத்திப் பணிகளைப் பாதிக்கின்றது என்பது குறித்தும் இதில் ஆழ்ந்த கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

உலக பொருளாதாரத்துக்கு எதிரான 21

## எச்சரிப்பதற்கு கமரூன் யார்?

### குணதாஸ அமரசேகர கொதிப்பு

கொழும்பு, நவ.18

"பிரிட்டன் பிரதமர் மட்டுமல்ல வேறு எந்தச் சக்தியாலும் கூட அரசை அசைக்க முடியாது" என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர உறுதிபட தெரிவித்தார்.

பிரிட்டன் பிரதமர் இலங்கைக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை கடுமையாகக் கண்டித்து இவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கைக்குள்ளேயே வந்து அரசை எச்சரிக்கை செய்ய இந்த டேவிட் கமரூன் யார்? இவரின் இந்த ஆட்டத் திற்குக் காரணம் புலம்பெயர் தமிழர்களே 21

## வண பிதா தாக்கப்பட்டமைக்கு எதிராக நேற்றுப் போராட்டம்



வலி.வடக்கு நவ 18

கடந்த 15 ஆம் திகதி யாழ். பொதுநூலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற காணாமற்போனோரின் உறவுகளின் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் மிக மோசமான தாக்குலுக்கு இலக்கான உரும்பிராய் பங்குத் தந்தை அருட்தந்தை ஜீட் நிக்சன் உட்பட அருட் தந்தையர்கள், பொது மக்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று மாலை உரும்பிராய் சென். மைக்கல் தேவாலயத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சென்.மைக்கல் தேவாலயப் பங்கு மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக் 21

## வவுனியாவில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.18

காணாமல் போன ஆசிரியர் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் செய்துள்ளது. செட்டிக்குளம் அல்காமிய முஸ்லிம்மாகாவித்தி 21

## இலங்கை அகதிகளை ஏற்பதற்கு தயாரில்லை

### ஆஸி.பிரதமர் கொழும்பில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

"இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு வரும் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்பதற்குத் தமது அரசு ஒருபோதும் தயாரில்லை" என்று ஆஸ்திரேலியப் பிரதமர் ரொனி அபோட் நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்.

அகதிகளின் வருகை 21



## ஐ.நா. பொறியிலிருந்து தப்பவே முடியாது அரசு

### கட்டியம் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ.18

"2014 மார்ச் மாதத்திற்குள் மனித உரிமை மீறல் குறித்து இலங்கை அரசு நம்பகத்தன்மையுடைய உள்ளக விசாரணையை மேற்கொள்ளாவிடின் ஐக்கிய நாடுகள் சபையின் பொறியில் இருந்து தப்பவே முடியாது" என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை 21

## 24 ஆவது மாநாடு மோல்டாவில்

கொழும்பு, நவ.18

பொதுநலவாய அரச தலைவர்களின் 24 ஆவது உச்சி மாநாட்டை 2015 இல் தென் ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான மோல்டாவில்நடத்து 21



கார்த்திகை தீபத் திருநாளை தமிழ் மக்கள் நேற்று அமைதியான முறையில் கொண்டாடினார்கள். வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் நேற்று மாலை முதல் தீபங்கள் ஏற்றப்பட்டு கார்த்திகைத் தீபத் திருவிழா கொண்டாடப்பட்டது. வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் முன்பாக சொக்கப்பானை எரிக்கப்படுவதையும், வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (கு-17)

## நடமாடும் சேவை; இன்று மாயவனூரில் நாளை ஸ்கந்தபுரத்தில்

யாழ்ப்பாணம், நவ.18

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டமும் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் கரைச்சி கண்டாவளை, பூநகரி, ஆகிய பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை கரைச்சி பிரதேச செயலர் பிரிவு வட்டக்கச்சி (கே.என்.38), மாயவனூர் (கே.என்.40) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான நடமாடும் சேவை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மாயவனூர் பொதுநோக்கு மண்டபத்திலும் நாளை செவ்வாய்க் கிழமை அக்கராயன்குளம் (கே.என்-05), ஸ்கந்தபுரம் (கே.என்.04) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான நடமாடும் சேவை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை ஸ்கந்தபுரம் சந்தைக் கட்டடத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்களும், காலங்கடந்த இறப்பு, பிறப்பு விண்ணப்பங்களும், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை விண்ணப்பங்கள், தொலைந்த அடையாள அட்டைக்கான பொலிஸ் அறிக்கை என்பனவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

# வண பிதா மீதான தாக்குதலுக்கு மன்னார் ஆயர் கடும் கண்டனம்

கொழும்பு, நவ.18


யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய தமிழ் உறவுகள் மீதும், கத்தோலிக்கப் பாதிரியார் மீதும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமையவே பொலிஸார் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். இது ஒரு மிருகத்தனமான செயல். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோரின் உறவினர்கள் வடக்கிலிருந்து கொழும்பு சென்று பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த சர்வதேச தலைவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் போராட்டங்களை நடத்த முயற்சித்தனர். எனினும், கொழும்பு சென்ற அவர்களை இடைவழியில் அரச படைகள் தடுத்துத் திருப்பியனுப்பி விட்டன.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பயணம் மேற்கொண்டிருந்த பிரிட்டன் பிரதமரை நேரில் சந்தித்து மனுவைக் கையளிப்பதற்காக காணாமற்போனோரின் உறவினர்கள் அமைதி வழியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைக் குழப்பியடிப்பதற்காகவும், பிரிட்டிஷ் பிரதமரை அவர்கள் நேரில் சந்திப்பதைத் தடுத்துநிறுத்துவதற்காகவும் பொலிஸார் படுமோசமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்கள், கத்தோலிக்க பாதிரியார்கள், மாகாணசபை உறுப்பினர்கள் என்று பாராமல் அங்கு நின்ற அனைவர் மீதும் பொலிஸார் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.



பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமையவே தமிழ் உறவுகள் மீதும், கத்தோலிக்க பாதிரியார்கள் மீதும் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மக்களின் அஹிம்சைப் போராட்டத்தில் கலந்துகொண்ட கத்தோலிக்கப் பாதிரியார்களை அடித்துக் கீழே விழுத்திய பொலிஸார், சப்பாத்துக் கால்களால் அவர்களை உதைத்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட கத்தோலிக்கப் பாதிரியார்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

எனவே, சர்வதேச சமூகம் விழித்தெழுந்து இலங்கை அரசின் மனித நேயமற்ற - மிருகத்தனமான செயல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் கொடூர சம்பவங்களைக் கண்களால் மட்டும் பார்த்துவிட்டு சர்வதேச சமூகத்தினர் அமைதி காக்கக்கூடாது. அடுத்தகட்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். - என்றார். (ஐ-சி)

## கமலேஷ் சர்மாவின் கருத்துக்கு கனேடிய அரசு கடும் கண்டனம்

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இலங்கை உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாக கமலேஷ் சர்மா தெரிவித்த கருத்துக்கு கனடா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. சர்மாவின் இலங்கை குறித்த கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என கனடா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அத்தோடு இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என கனடா தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவையல்ல எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சின் மனித உரிமை விவகாரச் செயலாளர் தீபக் ஒபராய் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம், நல்லாட்சி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது. அத்துடன் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு கொள்கைகள், கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றனவா இல்லையா என்பதனை உன்னிப்பாக கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பொது நலவாய நாடுகள் அமைப்பு கடுமையான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஸ)

## மத்திய அரசுக்கு எதிராக டெசோ கண்டத் தீர்மானம்

சென்னை, நவ. 18

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்துகொண்டமைக்கு டெசோ அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

டெசோ அமைப்பின் அவசரக் கூட்டம் நேற்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழர் பிரச்சினையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும், இலங்கை தமிழர் நலன் காக்க மத்திய அரசுக்கு எப்படி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் முன்னாள் அமைச்சர் சுப்பு லட்சுமி ஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஐ)

## வலி.வடக்கில் நிலம் மீட்க உருவாகியது மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம்

யாழ்ப்பாணம், நவ.18

வலி.வடக்கில் நில மீட்புக்கான அடுத்த கட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவை, வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு சங்கம் என்று மாற்றியமைத்துள்ளதுடன் அதற்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக் காலை தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் மற்றும் சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோரும் நூற்றுக் கணக்கான பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

வயாவிளான் மகா வித்தியால அதிபர் ஆ.சி.நடராஜா என்பவரால் தொடங்கப்பட்ட வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் போராட்டத்தின் மூலம் வலி.வடக்கின் ஒரு பகுதி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. அவரது மறைவின் பின்னர் அந்த அமைப்பு ஒழுங்கமைக்கப்படவில்லை.

தற்போது வலி.வடக்கு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ள நிலையில், அந்த அமைப்பின் பொருளாளரின் கோரிக்கைக்கு அமைவாக வலி.வடக்கு பிரதேச சபையினால் நேற்றைய கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டது. இதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

அழுத்தங்களைஎதிர்கொண்டு போராடக் கூடியவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட நிர்வாக சபையை தெரிவு செய்யுமாறு நடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கமைய வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவராக அ.குணபாலசிங்கம் உப தலைவர்களாக சு.தனையசிங்கம், சு.யோகராஜா ஆகியோரும் செயலாளராக பா.நாகேந்திரசீலன், உப செயலாளராக ச.தனபாலசிங்கம், பொருளாளராக நகுலசேகரன் மற்றும் ஊடக இணைப்பாளராக ஆ.தரணிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் விடுவிக்கப்படாத 24 கிராமசேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி 26 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-5)

உதயன்
18/11/2013



# நவ.29 - டிசெ.5 வரை டெங்கு ஒழிப்பு வாரம்

யாழ்ப்பாணம், நவ.18

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் டெங்கு நோய் ஒழிப்பு வாரத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை கடைப்பிடிக்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஆர்.யூட் சகல சுகாதாரத் திணைக்கள நிறுவனாங்களுக்கும் அறிவித்துள்ளார்.

"வடமாகாணத்தின் அனைத்து பிரதேசங்களிலும் டெங்கு நோய்த் தாக்கம் காணப்படுகிறது. தற்போது பருவ கால மழை பெய்யத் தொடங்கியுள்ளதை அடுத்து அதனைக் கட்டுப்படுத்த தீவிர மாக நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். மாகாணத்தில் டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய திட்டங்களைத் தயாரித்து அனைத்து இடங்களிலும் பரிசோதனைகளை நடத்த வேண்டும்" எனவும் அவர் அறிவித்துள்ளார். (வ-9)

# கணவனைத் தாக்கியதை விசாரிக்கச் சென்ற மனைவி மீது கத்திக்குத்து

வலி.வடக்கு, நவ. 18

கணவனைத் தாக்கியதைத் தட்டிக் கேட்கச் சென்ற மனைவி கத்திக்குத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஈவினைப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த பொன்னன் சசிகரன் ஒருவரால் தாக்கப்பட்டார். இது குறித்து அவரது மனைவி தாக்கியவரின் வீட்டுக்குச் சென்று தனது கணவரைத் தாக்கியது தொடர்பில் விசாரித்துள்ளார். அந்த வேளையில் அவர் மீது கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை கத்தியால் குத்தியவர் எனக் கருதப்படுபவரும் பின்னர் இனம் தெரியாதவர்களால் வெட்டப்பட்ட நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குறித்த சம்பவங்கள் நடைபெற்ற இடத்தில் இருந்து பொல்லுகள், மிளகாய்த்தூள் , இரும்புக் கம்பிகள் போன்றவற்றை சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளதுடன் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

# விவசாயிகள் ஏமாற்றம்

## மானிய உருளைக்கிழங்கின் அளவில் திடீர் மாற்றம்

அச்சுவேலி, நவ.18

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மானிய விலை உருளைக் கிழங்கு 200 மெற்றித் தொன்னில் இருந்து 132 மெற்றித் தொன்னாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்பார்த்த அளவு கிடைக் காமையால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன் தனியார் துறையினரிடம் அதிகூடிய விலையில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு 50 வீதம் மானிய விலையில் 200 மெற்றித் தொன் விதை உருளைக் கிழங்கு வழங்குவதற்கு மத்திய விவசாய அமைச்சு ஏற்பாடு மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.


200 மெற்றித் தொன்னில் 120 மெற்றித் தொன் றெட் லைட் சோடா இனமும், 60 மெற்றித்தொன் அனோவரி இனமும் , 20 மெற்றித் தொன் கல்வைட் இனமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் 980 விவசாயிகள் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு பதிவு செய்திருந்தனர். அவர்களுக்கு 4 அந்தர் வீதம் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட கிழங்கில் 68 மெற்றித் தொன் திடீரென குறைக்கப்பட்டதால் 2 1/2 அந்தர் (125 கிலோ) வீதம் வழங்கப்படுகின்றது.

எதிர்பார்த்த அளவு விதை உருளைக்கிழங்கு வழங்கப்படாமையால் விவசாயிகள் ஏமாற்றத்துக்கு உள்ளாகி இருப்பதோடு அதிக விலை கொடுத்து தனியாரிடம் விதை உருளைக்கிழங்கை கொள்வனவுசெய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் துறையினர் 50 கிலோ நிறை கொண்ட பொதி ஒன்றை 16 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதேவேளை 2011 ஆம் ஆண்டு 22.5 ஹெக்ரெயரிலும் கடந்த வருடம் 50 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்டது. இந்த வருடம் மானிய விலையில் கிழங்கு வழங்குவதோடு 100 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடுகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.



மானிய விலை விதை உருளைக்கிழங்கில் ஒதுக்கீட்டு அளவு திடீரென குறைக்கப்பட்டதும் தனியார் துறையில் அதிக விலை கொடுத்து விதை உருளைக்கிழங்கை கொள்வனவு செய்ய வேண்டிய எதிர்பாராத நிலைமையும் இந்த வருடத்துக்கான உத்தேச பயிர்ச்செய்கை அளவை குறைக்கும் என கூறப்படுகின்றது. (வ-11)

"_"

**ஒதுக்கீடு செய்யப்பட்ட கிழங்கில் 68 மெற்றித் தொன் திடீரென வெட்டப்பட்டதால் 2 1/2 அந்தர் (125 கிலோ) வீதம் வழங்கப்படுகின்றது.**

# விபத்தில் கால் முறிந்தது

தென்மராட்சி, நவ.18

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் சென்ற சைக்கிளுடன் மோதிவிட்டு தப்பியோடியது. அதனால் சைக்கிளில் சென்றவருக்கு கால் முறிந்ததுடன் காயங்களும் ஏற்பட்டன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது.

சரசாலை தெற்கைச் சேர்ந்த கந்தையா நடேசு (வயது-56) என்பவரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் மிருசுவில் திருத்த வேலைக் காக விடப்பட்ட தனது லாண்ட் மாஸ்டரைஎடுத்துவரச்சென்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.



# சிறுவர் தினத்தையொட்டி விழிப்புணர்வு ஊர்வலம்

## மன்னாரில் இடம்பெற்றது



மன்னார், நவ. 18

உலக சிறுவர் தினத்தை யொட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மன்னாரில் சிறுவர் தின விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலத்துக்கு மன்னார் உலக தரிசனம் நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது. நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் இதற்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய கலந்து கொண்டார். அதன் போது பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட சிறுவர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு அவர் பரிசில்களை வழங்கினார். அதைத் தொடர்ந்து 'குடும்பம் உங்களைப் பாதுகாக்கும்' என்ற தொனிப்பொருளில் சிறுவர் தின ஊர்வலம் ஆரம்பமானது. மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 9 மணியளவில் குறித்த ஊர்வலம் ஆரம்பமாகியதுடன் மன்னார் பஸார் பகுதிக்குச் சென்று மீண்டும் மன்னார் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

இதன்போது பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு சுலோகங்களையும் ஏந்தியவாறு காணப்பட்டனர். இவர்களுடன் மன்னார் உதவிப் பிரதேச செயலர் வினாசித்தம்பி பவாகரன், உலக தரிசனம் நிறுவனத்தின் பணியாளர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

# மருத்துவர்கள் இல்லை நோயாளர்கள் பாதிப்பு

## பண்டத்தரிப்பு மருத்துவமனையில்

சங்கானை, நவ.18

பண்டத்தரிப்பு அரச மருத்துவமனையில் மருத்துவர்கள் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மருத்துவ மனைகளிலும் மருத்து வர்கள் நியமிக்கப்பட்டிருந் தனர். குறித்த மருத்துவமனைக்கும் 2 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் ஒரு மாத காலத்துக்கும் மேலாக இவ்விருவரும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு நோயாளர்கள் சிகிச்சை பெற சங்கானை போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதனால் பெரும் சிரமங்களையும் போக்குவரத்துச் செலவையும் அவர்கள் எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (வ-29)



# மாணவருக்கு நற்சான்றிதழ் வழங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.18

இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை பாடசாலை மட்டத்தில் நற்சான்றிதழ்களை வழங்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

நற்சான்றுப் பத்திரங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை வட மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன. பாடசாலை அதிபர்கள் அவற்றை இன்று மாணவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்குமாறு செயலாளர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார். (வ-4-7)

# வடபகுதியில் பலரிடம் பணத்தைப் பெற்று குடி தண்ணீர் போத்தல் நிறுவனம் மோசடி

## பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு

வடமராட்சி, நவ.18

தென்பகுதியில் இயங்கிவரும் தண்ணீர்வழங்கும்நிறுவனம் ஒன்று தனது விற்பனையை வடக்கில் விரிவுபடுத்தும் பொருட்டு வடக்கில் பலரிடம் பணத்தைப் பெற்று திருப்பிக் கொடுக்காமல் மோசடி செய்துள்ளதாக வடக்கைச் சேர்ந்த பலர் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் குற்றஞ்சாட்டப்படுபவருக்கு எதிராகப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இந்த விடயம் நீதி மன்றுக்கும் இது வரை கொண்டு செல்லப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்டு 15 இற்கும் மேற்பட்டவர்கள் இங்கு உள்ளனர். அவர்களின் முறைப்பாடுகளையும் பதிவு செய்யப் பொலிஸார் பின்னடிப்பதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அவிசாவல, புவப்பிட்டிய வில் தற்போது இயங்கி வரும் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை விற்பனை செய்து வரும் நிறுவனம்ஒன்று வடக்கிலும் தனது விற்பனையை விரிவுபடுத்தும் நோக்கில் முன்னர் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் முகவர்களையும் விற்பனையாளர்களையும் கோரியது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கான முகவரும் வட மாகாண விற்பனை முகாமையாளரும் ஆள்களைச் சேர்ப்பதில் ஈடுபட்டனர்.

அவர்களைச் சந்தித்தபோது, முதலில் 13 இலட்சம் ரூபாவைக் கட்டுப் பணமாகச் செலுத்தும்படி கோரினர். அதற்கு இணங்க மறுத்தேன். பின்னர் 19 லீற்றர் கொள்ளளவுடைய ஆயிரம் வெற்றுப் போத்தல்கள் உள்ளதாகவும் அதனை 480 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யுமாறு கோரினர். அதன்படி அவிசாவளையிலுள்ள நிறுவனத்துக்குச் சென்று வட மாகாண முகாமையாளர் ஊடாக நிறுவன உரிமையாளரிடம் 800 போத்தல்களுக்காக 10 ஆம் திகதி 3 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாவைச் செலுத்தினேன். பணம் செலுத்தி 597 போத்தல்களைத் தந்து விட்டு மிகுதிப் போத்தல்களை அனுப்பவில்லை. கடந்த ஏப்ரல 10 ஆம் திகதியன்று வட மாகாண முகாமையாளர் என்னுடன் தொடர்பு கொண்டு, பல்வேறு அளவுகள் கொண்ட போத்தல்கள் தருவதாகக் கூறினார். இதனால் அதற்கென 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் இரண்டு கட்டங்களாக வைப்பிலிட்டேன். தண்ணீர்ப் போத்தல்களை எடுத்து வர 60 ஆயிரம் ரூபா செலுத்தி லொறி ஒன்றை 19 லீற்றர்களுடைய 247 வெற்றுப் போத்தல்களுடன் அவிசாவளைக்கு அனுப்பி வைத்தேன்.

இரண்டு நாள்களாக லொறியைத் தடுத்து வைத்திருந்து விட்டு தண்ணீர்ப் போத்தல்கள் எதுவுமின்றி திருப்பி அனுப்பி விட்டனர். பலமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோதும், பின்னர் நேரடியாகச் சென்று கேட்டபோதும் பணத்தையோ, தண்ணீர்ப் போத்தல்களையோ திருப்பித்தர மறுத்து விட்டனர். தம்மிடம் போத்தலுக்குரிய மூடிகள் முடிவடைந்து விட்டதாகவும் அதற்கென ஒரு இலட்சம் ரூபா தேவையெனவும் வட மாகாண விற்பனை முகாமையாளர் கூறினார். அவரிடம் என்னிடமிருந்து 62 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தேன்.

எனக்குத் தர வேண்டிய 6 இலட்சத்து 42 ஆயிரத்து 340 ரூபாவுக்கு தண்ணீர்ப் போத்தல்களை மூன்று நாள்களுக்குள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதாக அவர் தெரிவித்தார். எனினும் போத்தல்கள் எதுவுமே இதுவரை வந்து சேரவில்லை. அவர்களுடைய தொலைபேசியுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

நான் செலுத்திய பணம் முழுவதும் குடிதண்ணீர் வழங்கும் நிறுவன உரிமையாளரிடமே போய்ச் சேர்ந்தது.

எம்மிடம் மோசடி செய்து விட்டு தற்போதும் பத்திரிகைகள் ஊடாக வேறு நபர்களை முகவர்களாக, விற்பனையாளர்களாக எதிர்பார்த்து விளம்பரம் செய்து வருகின்றனர் நிறுவனத்தினர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நிறுவனம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து இரண்டு கட்டங்களாக 8 இலட்சம் ரூபாவை முற் பணமாகப் பெற்றுக் கொண்டு பணத்தைத் திருப்பி கொடுக்காமல் மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரும், கோண்டாவில், சுன்னாகம், பரந்தன், நெல்லியடி எனப் பல இடங்களையும் சேர்ந்த பலரிடம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நிறுவனத்தின் வட மாகாண விற்பனை முகாமையாளருடன் தொடர்பு கொண்ட போதும் அவரது தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது.

(த-4)

**இவ்வாறு பாதிக்கப்பட்டு 15 இற்கும் மேற்பட்டவர்கள் இங்கு உள்ளனர். அவர்களின் முறைப்பாடுகளையும் பதிவு செய்யப் பொலிஸார் பின்னடிப்பதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.**

---

## மரண அறிவித்தல்

### திருமதி விக்னேஸ்வரி (ராதா) பரமேஸ்வரன்



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி (ராதா) பரமேஸ்வரன் நேற்று (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரன் (ஈசுமாமா) அவர்களின் அன்பு மனைவியும் நாரந்தனை வடக்கு, காலஞ்சென்றவர்களான இரத்தினம் - யோகம்மா தம்பதியரின் அருமைமகளும் ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறு முகம் - சரஸ்வதி தம்பதியரின் அருமை மருமகளும் மதன், பிருந்தா (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவம் 2 ஆம் வருடம்) ஆகியோரின் தாயும் ருக்மாங்கதன் (கனடா), சூரசங்காரன், அம்பிகைபாகன், கிருபாகரன், யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் மங்கையற்கரசி (கொழும்பு) காலஞ்சென்ற கமலவேணி மற்றும் விஸ்வநாதர் காலஞ்சென்ற யோகேஸ்வரி, மனோரஞ்சிதமலர் (சுவிஸ்) உருத்திரகுமார், சற்குணநாதன், சிவகுமார் உமாராஜேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 62/4 வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

தகவல்: ஆ.பரமேஸ்வரன் (கணவர்)

---

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து அரசரத்தினம் (தாத்தா)

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து அரசரத்தினம் நேற்று (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜினிதேவி (சாந்தம்) அவர்களின் அன்புக்கணவரும் சுதாகரன் (கொலண்ட்), சசிகரன் (பெல்ஜியம்), சுபா, தீபா ஆகியோரின் அன்புத்தந்தையும் கந்தராசா (வலி. கிழக்கு ப.நோ.கூ.ச. நீர்வேலி), பகீரதன், யசோ (கொலன்ட), சர்மிளா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புமாமனும் கம்சா கிசோன், தட்சா, சாருஜன், துவாரகன் ஆகியோரின் அன்புப்பேரனும் சிவலிங்கம் (கனடா),, புவனேஸ்வரி, பிறின், குருபரன் காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தனராஜ், தர்சிகா, தர்மினி (கனடா), தர்மேந்திரா(கனடா) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2013) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு, நீர்வேலி. (077 4833911)

தகவல்: குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### அப்பையா லிங்கநாதன் (சிறி)

(சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

அளவெட்டி கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா லிங்கநாதன் (சிறி) நேற்று (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கணேஸ்வரம், அளவெட்டி. மனைவி, பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்

### கந்தர் கிட்ணன் (செல்லையா)



சங்கத்தார்வயல் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும், m.s லேன், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் கிட்ணன் நேற்று (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காமாச்சியின் அன்புக் கணவரும் சிவஞானம் (சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர், கிளிநொச்சி), தவமணிதேவி, சறோஜினிதேவி, மகேந்திரன், (கனடா), மனோகரன் (கனடா), ரவிச்சந்திரன் (லண்டன்), ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54 m.s லேன், கோண்டாவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

# வடக்கு முஸ்லிம்களை மீள்குடியமர்த்த விரைவில் ஆணைக்குழு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

வடமாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக ஆணைக்குழு ஒன்றை அமைக்கவுள்ளோம்.


அந்த ஆணைக்குழு மூலமாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண முதலமைச்சசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையான கூட்டு அமைப்பினருக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரை யாடல் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது அங்கு உரையாற்றும்போது முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் முஸ்லிம் மக்கள் பல அவலங்களை எதிர் நோக்கியுள்ளனர். குறிப்பாக வடபகுதி முஸ்லிம் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. 1990 ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். வெளியேற்றப்படும்போது ஒரு குடும்பமாக இருந்தவர்கள் தற்போது மூன்று குடும்பங்களாகியுள்ள நிலைமையே காணப்படுகிறது.

இவற்றையெல்லாம் கொண்டு வடமாகாண சபை ஊடாக இந்த நிலைமைக்கு தீர்வு காண முற்பட்டுள்ளோம். இதற்கென ஆணைக்குழு ஒன்றும் அமைக்கவுள்ளோம். முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்படுவதை வடமாகாண மக்கள் விரும்புகின்றனர்- என்றார்.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் மற்றும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வ-10)



# வெடி விபத்தில் காயமடைந்த சிப்பாய் சாவு



யாழ்ப்பாணம், நவ.18

இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிவிபத்தில் படுகாயமடைந்த இராணுவப் பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் உள்ள இராணுவமுகாம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இந்த வெடிவிபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் நுங்கலை பகுதியைச் சேர்ந்த உபாலி திசாநாயக்க (வயது -40) என்பவரே உயிரிழந்தவராவார்.

வெடிவிபத்தில் படுகாயமடைந்த இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று அங்கு உயிரிழந்தார். (த-4)

## சக்கோட்டை கடற்கரைப் பகுதியில்

# 6 பொதிகளில் ஹெரோயின்



வடமராட்சி, நவ. 18

பருத்தித்துறை சக்கோட்டை கடற் பகுதியில் பொதிகளில் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றுள்ளது. இதனை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளது.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ் பெக்டர் ஏ.ஏ.டபிள்யூ எஸ். அபயக்கோன், இன்ஸ் பெக்டர் எஸ். நிசாத், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எஸ். பண்டார, சே.முருகையா ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் சக்கோட்டை கடற்கரைப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது 3 கிலோ எடையுள்ள ஹெரோயின் 6 பொதிகள் கைப்பற்றப்பட்டன.

எனினும், சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை. இந்தப் போதைப் பொருள் இந்தியாவில் இருந்து கொண்டு வந்திருக் கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் பொதிகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அவற்றை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி அதன் அறிக்கையைப் பெறுமாறு உத்தர விட்டார்.

பகுப்பாய்வுத் திணைக்கள அறிக்கையில் 6 பொதிகளிலும் இருந்தது ஹெரோயின் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் போது பருத்தித்துறை பொலிஸார் இது தொடர்பாக மேலதிக அறிக்கையை சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படு கின்றது.

6 பொதிகளிலும் இருந்த போதைப் பொருளின் பெறுமதி 1 கோடியே 65 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-8)



"தேசத்துக்கு நிழல்" தேசிய மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் வெள்ளிக்கிழமை தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் மற்றும் பாடசாலைகளில் மரக் கன்றுகள் நடப்பட்டன. தென்மராட்சி கல்வி வலயத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் உட்பட பலர் வலய வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர். (வ-9)

# நெடுந்தீவு மக்களுக்கு விவசாயத்துக்கு டிராக்டர்

## விவசாய அமைச்சர் உறுதியளித்தார்

யாழ்ப்பாணம், நவ.18

நெடுந்தீவில் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் விவசாயி களின் பயன்பாட்டுக்கு என புதிய டிராக்டர் ஒன்றை வழங்குவதாக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விவசாயிகளிடம் உறுதியளித்தார்.

சாராப்பிட்டி கல் நிறைந்த பகுதி அங்கே நல்ல தண்ணீர் உண்டு. மேற்குப் பகுதியில் மண்வளம் இருக்கிறது. தண்ணீர் வசதி இல்லை. மேற்குப் பகுதியில் உள்ள வளமான மண்ணை சாராப்பிட்டி பகுதிக்குக் கொண்டு சென்றே பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு உதவக் கூடியதாக ஒரு டிராக்டர், லான்ட் மாஸ்டர் என்பவற்றைத் தந்து உதவு மாறு விவசாயிகள் அமைச் சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதைத் தொடர்ந்து முதலில் ஒரு டிராக்டரை வழங்குவதாக அமைச்சர் அறிவித்தார். (வ-7)



# கிராமங்களை இணைக்கும் வீதிக்குத் தார்

தென்மராட்சி, நவ.18

தென்மராட்சி பிரதேசத்தின் இரண்டு விவசாயக் கிராமங்களை இணைக்கும் வீதியை முதல் தடவையாக தார் வீதியாக மாற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளமான கைதடி-மட்டுவில் சிவன் கோவில் வீதி வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரு கிராமங்களினதும் நெல் வயல்கள் மற்றும் தோட்ட நிலங்களை ஊடறுத்துச் செல்லும் வீதி, நீண்ட காலமாக மணல் வீதியாக இருந்ததாகவும் விவசாயிகளும் நெற் செய்கையாளர்களும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே இதுவரை காலமும் இவ் வீதியை பயன்படுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வீதி புனரமைக்கப்பட்டதும் மட்டுவில், கைதடிப் பிரதேச மக்களுக்கு குறுகிய தார் வீதியாக இந்த வீதி பயன்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

# வாசிப்பு மாத நிகழ்வில் விவசாய அமைச்சர்

கைதடி, நவ.18

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் கைதடி பொதுநூலகத்தின் உலக வாசிப்பு மாத நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நூலக வளாகத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் தலைமையிலே நடைபெற்றது.

நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கல்வி சம்பந்த போட்டிகளில் வெற்றியீட்டி யோருக்கு அமைச்சர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-288)



# தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவே இலங்கை சென்றுள்ளார் குர்ஷித்

## இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கூறுகின்றார்

பெங்களூர், நவ.18
இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காகவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் அங்கு சென்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.
பெங்களூரில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது,
"இலங்கையில் நடைபெற்று வரும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளவில்லை. 8 கோடி தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அவர் அந்த முடிவை எடுத்துள்ளார்.
அதேநேரத்தில் இலங்கை தமிழ் மக்களுக்கு முன்னேற்றம், வளர்ச்சி, பாதுகாப்பு, சமஉரிமை ஆகியவை கிடைக்கச் செய்வதில் இந்திய மத்திய அரசு அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.
இலங்கை தமிழர்களின் மேம்பாட்டுக்காக கடந்த 5 ஆண்டுகளில் இந்திய அரசு 45 ஆயிரம் கோடி ரூபா செலவில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது.
இலங்கையில் தமிழர்களுக்கு சமஉரிமை கிடைக்க வகை செய்யும் வகையில் 13ஆவது அரசமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு எடுத்துள்ளது.



தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்களை பிரதமர் மன்மோகன்சிங் அண்மையில் சந்தித்துப் பேசினார். அவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று பிரதமர் உறுதி அளித்துள்ளார்.
தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காகவும், அதற்குத் தீர்வு காண்பதற்காகவுமே இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை சென்று உள்ளார். அங்கு நடைபெற்று வரும் பொதுநலவாய மாநாட்டிலும் அவர் கலந்து கொண்டுள்ளார். இலங்கை அரசுடன் தமிழர்களின் பிரச்சினை குறித்து அவர் விவாதிப்பார்" என்று தெரிவித்துள்ளார். (ற)

இந்திய அரசு இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று முன்னர் வலியுறுத்தி வந்த ஜி.கே.வாசன், அவ்வாறில்லாவிட்டால் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

## தீவிர சிகிச்சை பிரிவில் அப்துல் கலாம்



புதுடில்லி, நவ.18
இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
டாக்டர் அப்துல்கலாம் தனது இல்லத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலையில் திடீரென மயங்கி விழுந்தார். அதைத்தொடர்ந்து அவரது உதவியாளர்கள் அவரை புதுடில்லி இராணுவ மருத்துவமனையில் சேர்த்தனர்.
அப்துல் கலாமின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள மருத்துவர்கள், தொடர்ந்தும் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (ற)

## செருப்படி வாங்குகிறது காங்கிரஸ் கட்சி

### நரேந்திர மோடி கூறுகின்றார்

புதுடில்லி, நவ.18
காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மக்களிடம் செருப்படி வாங்கி வருகின்றனர் என்று கூறியுள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"ஏழ்மை என்றால் என்னவென்றே தெரியாத காங்கிரஸ் கட்சியினர் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நூறே நாள்களில் விலைவாசியை குறைத்து விடுவோம் என்று சவால் விட்டனர்.
அவர்கள் ஆட்சிக்கு வந்து 4 1/2 ஆண்டுகள் ஆகியும் தலைவிரித்தாடும் விலைவாசியை கட்டுப்படுத்த முடியவில்லை. சத்தீஸ்கரில் போட்டியிட்டு வென்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் மீண்டும் இந்த மண்ணை மிதித்ததில்லை. வாக்களித்த மக்களை திரும்பிக் கூட பார்த்ததில்லை.
தப்பித் தவறி காங்கிரஸ் தலைவர்கள் மக்களை சந்திக்க சென்றாலும் செருப்பைத் தூக்கி காட்டி மக்கள் அவர்களைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கைப் பிரச்சினையில் அரசியல் செய்யாதீர்கள்

### தமிழக கட்சிகளிடம் கோருகின்றார் மத்திய அமைச்சர் நாராயணசாமி

புதுவை, நவ.18
இலங்கைப் பிரச்சினையில் யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என்று அந்நாட்டின் வடமாகாண முதலமைச்சர் கூறியுள்ளார். அதே போன்று இலங்கை பிரச்சினை வைத்து யாரும் தமிழகத்தில் அரசியல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறியுள்ளார் இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி.
புதுவையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத்தெரிவிக்கும்பேதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"தமிழகத்தின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தே இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்தார். அவருக்குத் தமிழர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பொதுநலவாய மாநாட்டில் அயலுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொண்டிருக்கக் கூடாது என்று சில தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் இலங்கை எமது அயல் நாடு. எனவே மாநாட்டை முற்றாகப் புறக்கணிக்க முடியாது. இந்திய மத்திய அரசு இலங்கையில் உள்ள தமிழர்களின் புனர்வாழ்வுக்காக 10 ஆயிரம் கோடி ரூபா நிதி வழங்கியுள்ளது.
இலங்கை தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும்; தமிழக-புதுவை பகுதி மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து சிறை பிடிப்பதைத் தடுக்க வேண்டும்; இலங்கைத் தமிழர்கள் நலவாழ்வு பெற வேண்டும் இவையெல்லாம் பொதுநலவாய மாநாட்டில் சல்மான் குர்ஷித் கலந்து கொண்டால் தான் சாத்தியமாகும்.
இலங்கையின் வட மாகாண முதலமைச்சர் விஸ்வேஸ்வரன் இலங்கை பிரச்சினையில் யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளார். அதேபோன்று இந்த விவகாரத்தை தமிழகத்தில் யாரும் அரசியல் செய்ய வேண்டாமென்று நான் கேட்டு கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மங்கள்யானின் சுற்றுப் பாதை அதிகரிப்பு

புதுடில்லி, நவ.18
செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக இந்தியாவால் விண்ணுக்குச் செலுத்தப்பட்டுள்ள மங்கள்யான் விண்கலத்தின் சுற்றுப்பாதை வெற்றிகரமாக 1.92 லட்சம் கிலோமீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து, மங்கள்யானின் பாதை அதிகரிப்புத் திட்டங்கள் வெற்றியடைந்துள்ளன என்று இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.
இப்போது பூமியிலிருந்து 1 லட்சத்து 92 ஆயிரத்து 874 கிலோமீற்றர் தொலைவில் 217 கிலோமீற்றர் கொண்ட நீள்வட்டப் பாதையில் பூமியை மங்கள்யான் சுற்றிவருகிறது. செக்கனுக்கு 101 மீற்றர் வேகத்தில் விண்கலம் சுற்றி வருகின்றது என்று இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.
விண்கலத்தின் பாதையை அதிகரிக்கும் முயற்சி கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.27 மணிக்கு தொடங்கியது. 4 நிமிடங்களில் விண்கலத்தின் பாதை திட்டமிட்டவாறு அதிகரிக்கப்பட்டது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.
இந்த முயற்சியில் விண்கலத்தின் பாதை 74 ஆயிரம் கிலோமீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.
அதையடுத்து மங்கள்யான் விண்கலம் செவ்வாயை நோக்கிய பாதையில் டிசெம்பர் 1ஆம் திகதி செலுத்தப்பட உள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## அவசரமாகத் தரையிறங்கியது வி.கே. சிங் பயணித்த விமானம்

புதுடில்லி, நவ.18
புதுடில்லியில் இருந்து 100 பயணிகளுடன் மும்பை சென்ற விமானம் ஒன்று அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. அந்த விமானத்தில் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி வி.கே.சிங்கும் பயணம் மேற்கொண்டிருந்தார்.
விமானம் பறப்பை மேற்கொண்டிருந்தவேளை விமானத்தில் திடீரென தீ எச்சரிக்கை கருவி ஒலித்ததால் விமானம் மீண்டும் புதுடில்லி விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. பின்னர் பயணிகள் அனைவரும் வேறு விமானம் மூலம் மும்பைக்குப் பயணமானார்கள். (ற)

## இணையப் பாவனையில் வேகமாக முன்னேறுகின்றது இந்தியா

புதுடில்லி, நவ.18
இந்தியாவில் இணையத்தள பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
இந்தியாவில் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை இணையத்தள பார்வையாளர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை




205 மில்லியனை எட்டியுள்ளது. அதேவேளை 2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் இது 243 மில்லியனை எட்டக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்தியாவின் நகர்ப் புறங்களில் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையிலான இணைய பயன்பாட்டாளர்கள் 137 மில்லியன் பேர் என்றும் அது டிசெம்பர் மாதத்துக்குள் 141 மில்லியனை தொடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
இந்தியாவின் கிராமப்புறங்களில் 2012ஆம் ஆண்டு ஜூன் முதல் இணைய பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 58 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.
உலகிலேயே இணைய பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையில் 300 மில்லியன் பேரை கொண்டு சீனா முதல் இடத்திலும் 207 மில்லியன் பயன்பாட்டாளர்களைக் கொண்ட அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் உள்ளது. (ற)

## மாலைதீவு ஜனாதிபதியாக ஜாமீன் தெரிவு

மாலே, நவ.18

மாலைதீவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பாராத திருப்பமாக அப்துல்லா ஜாமீன் வெற்றி பெற்றுள்ளார்.

மாலைதீவில் ஜனாதிபதிக்கான முதற்கட்டத் தேர்தல் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதியும், ஜனநாயகக் கட்சி தலைவருமான முகமது நஷீத்துக்கு 46.4 சதவீத வாக்குகளும், மாலைதீவு முன்னேற்ற கட்சித் தலைவரும், முன்னாள் சர்வாதிகாரி மவுமூன் அப்துல் கயூமின் சகோதரருமான அப்துல்லா ஜாமீனுக்கு 30.3 சதவிகித வாக்குகளும் கிடைத்தன.

அதனைத்தொடர்ந்து நேற்று முன்தினம் 2ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. அதில் யாரும் எதிர்பாராத வகையில் அப்துல்லா ஜாமீன் 51.39 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதி முகம்மது நஷீத். 48.61 சதவிகித வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

தேர்தல் முடிவுகள் குறித்து, மாலைதீவு தேர்தல் ஆணையம் நேற்று அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிட்டது. நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் அப்துல்லா யாமீன் அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். (ற)



தென்கொரியாவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பின் மீது மோதி ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்தனர். தனியார் நிறுவனம் ஒன்றின் பணியாளர்களை அழைத்துச் செல்லும் ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளாகியுள்ளது. பணியாளர்களை அழைத்துச் செல்வற்காக அடுக்கு மாடிக் கட்டடத்தின் மேற்பகுதியில் தரையிறங்க முயன்றபோது அதன் இறக்கைகள் அடுக்குமாடிக் கட்டடத்தில் உரசியதை அடுத்தே விபத்து இடம்பெற்றுள்ளது. விமானியும் அவரது உதவியாளருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர். (ற)

## இராணுவத்தை குறைக்க சீனா திட்டம்



பீஜிங், நவ.18

சீன இராணுவத்தில் போர் சாராத இராணுவப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அந்த நாடு திட்டமிட்டுள்ளது.

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் உலகின் மிகப் பெரிய இராணுவம் ஆகும். இந்த இராணுவத்தின் கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக சீன அரசு சீர்திருத்தங்களைச் செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. அதில் போர் சாராத இராணுவப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும் ஒன்றாகும். (ற)

# ஈரான் பிரச்சினைக்கு விரைவில் உடன்பாடு

## அமெரிக்கா நம்பிக்கை

நியூயோர்க், நவ.18



ஈரான் அணு ஆயுத விவகாரத்துக்கு விரைவில் உடன்பாடு ஒன்று எட்டப்படும் வாய்ப்பு இருக்கின்றது என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்காவின் மூத்த அதிகாரி ஒருவர்,

"இந்த விவகாரம் தொடர்பாக ஜெனீவாவில் அடுத்த வாரம் பேச்சு நடைபெற உள்ளது. இது மிகவும் முக்கியமானது. அந்தப் பேச்சின் போது ஈரான் அணு ஆயுத விவகாரத்தில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும் வாய்ப்பு உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, "அணு ஆயுதம் விவகாரம் தொடர்பாக ஈரான் மீது புதிய தடைகளை விதிக்கும் வகையில் எந்தவித நடவடிக்கையிலும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடக் கூடாது. அதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் ஈரான் தனது அணு ஆயுதத் திட்டத்தை கைவிடாமல் முன்னெடுத்து செல்லும். அதுபோன்ற நிலை ஏற்பட்டால், வேறு வழியின்றி ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போருக்கு தயாராக வேண்டிய நிலை ஏற்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய 6 நாடுகளுடன் ஈரான் பேச்சு நடத்தி வருகிறது. ஜெனீவாவில் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுக்களில் அணுஆயுத திட்டத்தை ஈரான் உடனடியாக நிறுத்தினால் அந்நாட்டிற்கு எதிராக ஏற்கெனவே விதிக்கப்பட்ட தடைகளில் இருந்து நிவாரணம் கிடைக்க வழி வகை செய்வது தொடர்பான முதல்கட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அது நிறைவேறவில்லை. (ற)

## ஒரு குழந்தைச் சட்டம்: தளர்த்த சீனா முடிவு

பீஜிங், நவ.18

43 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு குழந்தைத் திட்டத்தில் தளர்வுகளை ஏற்படுத்த சீன அரசு முடிவு செய்துள்ளது.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. இதனையடுத்து 1970 ஆம் ஆண்டு ஒரு குழந்தை திட்டம் சீனாவில் கொண்டு வரப்பட்டது.

அதன்படி கிராமப்புறங்களில் தம்பதிகளுக்குப் பிறக்கும் முதல் குழந்தை பெண்ணாக இருந்தால் 2ஆவது குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. எனினும் பின்னர் கிராமப்புற, நகர்ப்புற தம்பதிகள் யாரும் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

தற்போது சீனாவில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதால் ஒரு குழந்தை திட்டத்தை கைவிட அரசு முடிவு செய்துள்ளது. கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 18 ஆவது மத்திய குழுக் கூட்டத்திலும் இந்தச் சட்டத்தை தளர்த்துவது குறித்து வலியுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சீனாவில் நடைமுறையில் உள்ள ஒரு குழந்தை திட்டம் தளர்த்தப்படவுள்ளது. அதன்படி தம்பதிகள் 2 குழந்தைகள் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

சீன அரசின் இந்த முடிவுக்கு அந்நாட்டு மக்கள் அமோக வரவேற்பு தெரிவித்துள்ளனர். (ற)

## பாகிஸ்தானில் வன்முறை: 11 பேர் சாவு

இஸ்லாமாபாத், நவ.18

பாகிஸ்தானில் முஹரம் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்பட்ட பேரணியில் ஏற்பட்ட வன்முறைகளில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். வன்முறையின் போது மாணவர்கள் உயிருடன் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. வன்முறைகளை அடுத்து அங்கு ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# ஆர்ப்பாட்டத்தில் சூடு

## 40 பேர் சாவு; பலர் காயம் லிபியாவில் பயங்கரம்

திரிபோலி, நவ.18

லிபியத் தலைநகர் திரிபோலியில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 40க்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 500க்கும் மேற்பட்டவர் படுகாயமடைந்தனர்.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முவம்மர் கடாபி கொல்லப்பட்ட பின்னர் அங்கு பலவீனமான அரசே காணப்படுகின்றது. நாட்டின் பல பகுதிகளிலும் கடாபியின் ஆதரவாளர்களான போராளிகளின் ஆதிக்கம் காணப்படுகின்றது. பொதுமக்களின் மீது அடக்கு முறையை ஏவி வரும் போராளிகள் பொதுமக்களின் சொத்துகளையும் சூறையாடிச் செல்கின்றனர்.

போராளிகளுக்கு எதிராக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தலைநகர் திரிபோலியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை வாகனங்களில் வந்த போராளிகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்கள். அதில் 40க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 500க்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் பலரின் நிலை மோசமாக உள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

# விமானத்தில் பயணித்த பயணி தவறி வீழ்ந்தார் கடலுக்குள்

## தேடும் பணிகள் தீவிரம்

மியாமி, நவ.18

பஸ் மற்றும் ரயிலில் இருந்து பயணிகள் தவறி விழுந்துள்ளதை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அமெரிக்காவில் நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் இருந்து பயணி ஒருவர் தவறி கடலில் விழுந்துள்ளார். அவரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தென் கிழக்கு புளோரிடாவில் மியாமி கடற்பகுதியில் பறந்து கொண்டிருந்த சிறிய ரக விமானத்தின் விமானி கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டு தகவல் ஒன்றைத் தெரிவித்துள்ளார். பயணி ஒருவர் தவறிக் கடலில் வீழ்ந்துவிட்டார் என்பதே அந்தத் தகவல். அப்போது விமானம் 609 மீற்றர் உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. அதையடுத்து மியாமி விமான நிலையத்திற்கு தென் கிழக்குப் பகுதியில் கடலில் விழுந்தவரைத் தேடும் பணியில், கடலோர பாதுகாப்புப் படை ஈடுபட்டுள்ளது.

கடற்பரப்பின் மீது பறந்து கொண்டிருந்த விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. அந்த விமானம் எங்கிருந்து வருகிறது, அதில் எத்தனை பயணிகள் இருந்தனர் என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ற)


## பொலிஸார் மீது தாக்கு; சீனாவில் 9 பேர் சாவு

பீஜிங், நவ.18

சீனாவின் தீவிரவாதிகள் பொலிஸ் நிலையம் மீது நடத்திய தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

சின்ஜியாங் மாகாணத்தில் பொலிஸ் நிலையம் ஒன்றை சூறையாடிய தீவிரவாதிகள் அங்கிருந்த இருபொலிஸாரை கோடாரிகளால் வெட்டிக் கொன்றுள்ளனர். அதையடுத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தீவிரவாதிகளும் உயிரிழந்துள்ளனர். (ற)

# 60வருட திருமண நிறைவுநாள் வாழ்த்து



**திரு.திருமதி மண்டலேஸ்வரம் தங்கரத்தினம்**
தம்பதியினர் (ஆனைக்கோட்டை)
இன்று (18.11.2013)
திங்கட்கிழமை
தமது அறுபது வருட திருமண
நிறைவு நாளைக் கொண்டாடும்
எமது அன்புக்குரிய
திரு.திருமதி மண்டலேஸ்வரம் தங்கரத்தினம்
தம்பதியினரை சகல நன்மைகளும்
பெற்று ஆரோக்கியமாக நீடூழி
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:-*
ஜெகதீசன் குடும்பம்
ஆதித்தன் குடும்பம்
மாய்யவன் குடும்பம்

சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(39841)(7.6.3)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**OXFORD SPEECH CENTRE**
Only for workers &
Tertiary Level Students-
Individual
Call-077 768 3655 (40221)(4.6.3)

**ஒத்துமாறல்**
மேல் மாகாணத்தில் பணிபுரியும் BA ஆசிரியர் வட மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு : 077 959 0922 (39895)(7.6.3)

**பணிப்பெண் தேவை**
கணவன், மனைவி
இருவர் கொண்ட சிறிய
குடும்பத்துக்கு முழுநேர
பணிப்பெண் ஒருவர்
தேவை. (39904)(4.6.3)
தொடர்பு:077 985 9218

**Group/Personal, Classes English Medium**
A/L Accounting O/L Arts Subject
English any Grade
077 331 6402 (40215)(7.6.3)

# மாந்தை மேற்கு 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்
## மாந்தை மேற்கு பிரதேசசபை

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார். என்னும் முகவரியிலிருந்து (தொலைபேசி இல 023-3233627/023-3233742) 13.11.2013 ஆம் திகதியிலிருந்து 04.12.2013 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 2.00 மணிக்கும் இடையில் கட்டணங்களை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர). | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) | அனுமதிக்கப் பட்ட கொல்களம் | 1 Kg இறைச்சியின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச விலை |
|---|---|---|---|---|---|---|
| | அடம்பன் உப அலுவலகம் | | | | | |
| 01 | காத்தாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 8,000.00 | 484,000.00 | | 400.00 |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | 363,000.00 | | 400.00 |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | 363,000.00 | புளியங்குளம் | 400.00 |
| 04 | ஆண்டாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | 363,000.00 | | 400.00 |
| | விடத்தல்தீவு உப அலுவலகம் | | | | | |
| 05 | விடத்தல்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 302,500.00 | பெரியமடு | 400.00 |
| 06 | பெரியமடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | 181,500.00 | | 400.00 |
| | இலுப்பைக்கடவை உப அலுவலகம் | | | | | |
| 07 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | 121,000.00 | | 400.00 |
| 08 | மூன்றாம்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | 121,000.00 | மூன்றாம்பிட்டி | 400.00 |
| | மடு உப அலுவலகம் | | | | | |
| 09 | பெரிய பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | 363,000.00 | பெரிய பண்டிவிரிச்சான் | 400.00 |
| 10 | காக்கையன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1;000.00 | 6,000.00 | 363,000.00 | காக்கையன்குளம் | 400.00 |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார் என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்

01. கேள்விகள் யாவும் 04.12.2013 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு திறக்கப்படும். 04.12.2013 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியினையும் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. வியாபார நடவடிக்கையின் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்க கூடிய தராசினை பயன்படுத்த வேண்டும்.

06. 2013 ஆம் ஆண்டுக்கான குத்தகை நிலுவை உள்ளவர்கள் 2014 ஆம் ஆண்டுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

07. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 17.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

08. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு

09. கேள்வி சம்மந்தமான மேலதிக விவரங்களை மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சு.வரப்பிரகாசம்,
தவிசாளர்,
மாந்தை மேற்கு பிரதேசசபை,
அடம்பன்.
(C/12297)(2.3.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை
D8 உருத்திரபுரம்



லோகநாதன் தனுட்ஷன்
(புள்ளி - 162)



சதிஸ்குமார் கபா
(புள்ளி - 158)

எமது பாடசாலையில் 2013ஆம் ஆண்டு
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
(37585)(7.6.3)

# 10 ஆவது பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




இன்று (2013.11.18)
திங்கட்கிழமை பத்தாவது பிறந்த
நாளைக் கொண்டாடும்
தேவிகபாலன் -பிரியதர்சினி
தம்பதியரின்
செல்வப் புதல்வன்
**தே.இராகவன்**
யா/இணுவில் மத்திய
கல்லூரியில் கல்வி
கற்று 2013 தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் **161** புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்துள்ளமையைப் பாராட்டி
வாழ்த்துவதுடன், மேலும் கல்வியில் சிறப்புற இந்நாளில்
வாழ்த்துகின்றோம். இவருக்குக் கற்பித்த அனைத்து
ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.
(40216)(3.6.4)
வாழ்த்துவோர்:
மஞ்சத்தடி, இணுவில். குடும்பத்தினர்.

**யாழ் மாவட்ட பாரஹர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

சகல அங்கத்தவர்களுக்கும்!
சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை நடத்த இருப்பதனால் அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 25.11.2013 இற்கு முன்னதாக சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

செயலாளர்
க.செல்வச்சந்திரன்
(சி/14903) (7.6.3)

**IT Diploma Courses**



- Diploma in Information Technology
- Dip. in Computerized Accounting
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Diploma in Hardware Engineering
- AutoCAD
- Tally Accounting

புதியபிரிவுகள் ஆரம்பம்

- JAVA
- .VBNET
- PHP
- C, C++

Advanced Video Editing Video Editing
Dip. in Video Production & Multimedia
Adobe Premiere CS6, Photoshop CS6 Pinnacle Studio HD 16, Adobe After Effects

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

DMI COMPUTER EDUCATION

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M. M. V. வீதி, Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

கிளிநொச்சியில் போர் காரணமாக

## இரும்புத் துகள்களுடன் உலாவும் மனிதர்கள்


அக்கராயன், நவ. 18

போரின் போது ஏற்பட்ட குண்டுச் சிதறல்களால் உடலில் இரும்புத் துகள்களுடன் காணப்படும் அநேக மானோர் தினமும் கிளிநொச்சி மருத்துவமனைக்கு வருவதாக பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் மா.ஜெயராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத்தை உருவாக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தின் மிக முக்கியமான ஒரு நிகழ்வாக நான் இதனைக் கருதுகின்றேன். ஏனெனில், கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் உள சமூக பிரச்சினைகளில் மாற்றுத் திறனாளிகளின் விடயமும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. மாற்றுத் திறனாளிகளின் குறைகளை மையப்படுத்தி அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் ஒருங்கிணைந்த முறையிலான சேவை சரியான வகையில் கிடைக்கவில்லை என்ற குறை எல்லோரிடத்திலும் காணப்படுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒற்றைக் காலை இழந்த ஒருவர் என்னிடம் வந்து தான் 3000 ரூபா செலவழித்து செயற்கைக் கால் பொருத்தியதாகவும் தாம் செலவழித்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியுமா என்றும் கேட்டார். நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகளை வழங்கினாலும் இது தொடர்பான விழிப்புணர்வு குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பிரிவின் ஊடாகவே மாற்றுத் திறனாளிகளுக்கென பெருமளவு பணம் செலவு செய்யப்படுகிறது. கிளிநொச்சி நகரத்தைத் தவிர கிராமப் புறங்களில் விழிப்புணர்வு அதிகமாகத் தேவையாகவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரும்புத் துகள்களை உடம்பிலே சுமந்துகொண்டு திரியும் மக்கள் எம்மிடையே உள்ளனர். தினமும் கிளிநொச்சிப் பொது மருத்துவமனைக்கு இவர்களில் பலர் வருகின்றனர். இரும்புத் துகள்களைத் தமது உடம்பிலிருந்து எடுத்துவிடுமாறு கூறுகின்றனர். இரும்புத் துகள்களை உடம்பில் சுமந்து திரிபவர்கள் மன அழுத்தத்துடனேயே வாழ்கின்றனர். இதனால் தமது அன்றாட வேலைகளைக் கூட செய்ய முடியாதவர்களாக இவர்கள் இருக்கின்றனர். கண்ணால் காணுகின்ற மாற்றுத் திறனாளிகளை மட்டுமே கணக்கில் எடுக்காது கண்ணுக்குத் தெரியாமல் உடலில் இரும்புத் துகள்களைச் சுமப்பவர்களையும் உள்வாங்கி அவர்களுக்கான சேவைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (க-18)



காலபோக நெற் செய்கைக்கென கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. (க-18)

# மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு வேண்டுகோள்

### புலம் பெயர்ந்தவர்களிடம் விடுத்தார் மாகாணசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், நவ.18

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகம் முன்வர வேண்டும். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதிக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், முன்பள்ளி நிர்வாகம் ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.



இந்தக் கிராமத்தில் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலையிலுள்ள மாணவர்களைக் கொண்ட மூன்று குடும்பங்கள் அவருக்கு அடையாளம் காண்பிக்கப்பட்டன. உடனடியாக குறித்த குடும்பங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட அவர் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தருவதாகத் தெரிவித்தார். இதன் பின்னர் ஒரு வார காலத்தின் பின்னர் மீண்டும் அந்த மக்களை அவர் சந்தித்தார்.

இதன்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஆரோக்கியநாதர் சந்தானநாயகம் என்பவரால் வழங்கப்பட்ட முதல்கட்ட உதவிப் பணத்தை தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அந்த மூன்று குடும்பங்களுக்கும் வழங்கி வைத்தார். (க-5)

பொன்தீவுக் கண்டல் காணி விவகாரம்

## உரிமை கோருகின்றனர் இரண்டு சமூகத்தினரும்



மன்னார், நவ. 18

வேற்றுச் சமூகத்தவருக்கு காணிகளைப் பெற்றுக் கொடுப்பதால் இன முரண்பாடுகள் ஏற்படுவதுடன் கலாசார சீரழிவுகளும் இடம்பெறுமென பொன்தீவுக்கண்டல் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண சபை உறுப்பினர்களும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொன்தீவுக்கண்டல், பூவரசங்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்களைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தபோதே இவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

"ஊர் எல்லையிலுள்ள காணிகளில் எமது மக்களே முன்னர் குடியிருந்தனர். நாம் விசுவாசமாக வணங்கும் பொற்பேழையும் இங்குள்ளது. இதனால் இந்தக் காணியை வேறு சமூகத்திடம் விட்டுத்தர முடியாது. இந்தக் காணிப் பிரச்சினையின் பின்னணியில் அமைச்சர் ஒருவரும், அரச அதிகாரிகளும் செயற்படுகின்றனர்" என்று தெரிவித்தனர். இது குறித்து பூவரசங்குள மக்கள் கூறிகையில்;

இந்தக் காணி அரசுக்குரியது. எவருக்கும் அதில் தனிஉரிமை இருப்பதாகத் தெரியவில்லை. எமது முன்னோர்கள் அந்தக் காணியைப் பயன்படுத்தியுள்ளனர். பூவரசங்குளம் பகுதியில் 106 குடும்பங்கள் காணி இல்லாததால் மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ளனர். 2005 ஆம் ஆண்டு நாம் காணிகளை வழங்குமாறு விண்ணப்பித்திருந்தோம். அதற்கான பதிவுகளும் உள்ளன. காணியைப் பிரித்துக் கையளிப்பதெனத் தீர்மானித்த பின்னர் பிரச்சினையை உருவாக்குவது நியாயமற்றது.

இதேவேளை- தமக்கான இந்திய வீட்டுத் திட்டத்தையும் துரிதப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (க-10)

## மூட்டைப் பூச்சிகளால் தொல்லை

கடந்த பல மாதங்களாக மன்னார் பொது மருத்துவமனையின் சகல நோயாளர் விடுதிகளிலும் மூட்டைப் பூச்சிகளின் தொல்லை காணப்படுவதால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மூட்டைப்பூச்சிகள் தம்மைப் பதம் பார்ப்பதால் தூங்கக் கூட முடியாத நிலையில் மிகவும் வேதனையை அனுபவிப்பதாக நோயாளிகள் கூறுகின்றனர். இதுபற்றி அங்கு கடமை புரியும் பணியாளர்களிடம் கேட்டபோது பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் மூட்டைப் பூச்சிகளை அழிக்க முடியவில்லை. இதற்கு மேலாக நாம் என்ன செய்வது என வினா எழுப்புகின்றனர். நோய்க்கு நிவாரணம் பெறச் செல்லும் நோயாளிகளை மூட்டைப்பூச்சி கடிப்பதுடன் அவற்றை வீடுகளுக்கும் சுமந்து சென்று பரப்புகின்ற நிலைமையே காணப்படுகின்றது. (க)

## கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் நடமாடும் சேவைகள்

கிளிநொச்சி , நவ.18

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான நடமாடும் சேவைகள் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளன.

இந்த மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று 18ஆம் திகதி தொடக்கம் இந்த நடமாடும் சேவைகள்இடம்பெறவுள்ளன. இந்த நடமாடும் சேவைகளில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு சான்றிதழ்கள் மற்றும் காலம்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும். தொலைந்து போன தேசிய அடையாள அட்டை தொடர்பான பொலிஸ் அறிக்கைகளையும் இந்த நடமாடும் சேவையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த நடமாடும் சேவைகள் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் - இன்று 18ஆம் திகதி மாயவனூர், வட்டக்கச்சி கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு மாயவனூர் பொது நோக்கு மண்டபத்திலும், நாளை 19ஆம் திகதி ஸ்கந்தபுரம், அக்கரா யன்குளம்பிரிவுமக்களுக்கு ஸ்கந்தபுரத்திலும், 21ஆம் திகதி ஆனைவிழுந்தான்குளம், வன்னேரிக்குளம்ஆகியபிரிவுமக்களுக்கு ஆனைவிழுந்தான் பொது நோக்கு மண்டபத்திலும்,

22 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் - முழங்காவில், நாச்சிக்குடா ஆகிய பிரிவு மக்களுக்கு முழங்காவில் கிராம அலுவலர் அலுவலகத்திலும், 23ஆம் திகதி ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன் கட்டு ஆகிய பிரிவு மக்களுக்கு ஜெயபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும், 29ஆம் திகதி கிராஞ்சி கிராம அலுவலர் அலுவலகத்திலும்

25 ஆம் திகதி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் - கோரக்கன்கட்டு, ஊரியான் ஆகிய பிரிவு மக்களுக்கு ஊரியான் பொது நோக்கு மண்டபத்திலும், 26ஆம் திகதி புன்னை நீராவி கிராம அலுவலர் அலுவலகத்திலும், 28ஆம் திகதி கல்மடுநகர், தர்மபுரம் கிழக்கு ஆகிய பிரிவு மக்களுக்கு தர்மபுரம் கிழக்கு பொது நோக்கு மண்டபத்திலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## போட்டிக்கு சென்ற மாணவன் சாவு




மட்டக்களப்பு, நவ.18
கொழும்பு சென்.தோமஸ் கல் லூரி நீச்சல் தடாகத்தில் மூழ்கி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளான்.
கொழும்பு சென்.தோமஸ் கல்லூரிக்கும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவிருந்த கூடைப்பந்தாட்டப் போட்டிக்காகச் சென்ற யுஜின் டிலக்சன் (வயது -15) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.
மட்டக்களப்பிலிருந்து வெள்ளிக்கிழமை காலை கொழும்புக்குச் சென்ற புனித மிக்கேல் கல்லூரியின் மாணவர்கள் 30பேர் நீச்சல் தடாகத்தில் நீராடிவிட்டு இரவு உணவுக்காகச் சென்றுள்ளனர். அப்போது ஒருவரைக் காணவில்லை என்று தேடிய போது அவர் நீச்சல் தடாகத்தில் 13 அடி ஆழமான பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலம் மீட்கப்பட்டு களுபோவில வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. சிறந்ததொரு கூடைப் பந்தாட்டவீரனை மட்டக்களப்பு இழந்து நிற்பதாக பயிற்றுவிப்பாளர் தெரிவித்தார். (ச)

# போர் முடிவுக்கு வந்தும் முகாம்களிலேயே வாழ்வு

### சம்பூர் மக்களின் அவலத்தை கூறுகிறார் செல்வராசா எம்.பி.

கிழக்கில் போர் முடிந்து 7 ஆண்டுகள் கழிந்த பின்னரும் சம்பூர் மக்கள் தங்களது சொந்த நிலத்தை இழந்தவர்களாக இது வரைக்கும் மீள்குடியமர்த்தப் படாமல் கிளிவெட்டியில் உள்ள தகரக்கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கூறினார்.
மட்டக்களப்பு பெரிய கல்லாறு மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சம்பூர் மக்களுக்கு உணவைக்கூட அரசு வழங்கவில்லை. சர்வதேச சட்டப்படி அவர்களுக்கு உண்ண உணவு கொடுக்கப்பட வேண்டும். அதனையும் கொடுக்காமல் அவர்களையும் சொந்த இடத்தில் குடியமர்த்தாமல் தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமாகும்.
சம்பூர் மக்கள் சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் இரண்டு வருடம் அகதி வாழ்க்கை வாழ்ந்து பின்னர் அவர்களை சொந்த இடத்தில் குடியமர்த்தவென்று அழைத்துச் சென்று கிளிவெட்டியில் அநாதரவாக விடப் பட்டுள்ள னர்.
தமிழ் இனம் பூர்வீகமாக இருந்த இடத்தை வழங்க மறுக்கும் அரசு பெரும் பான்மை யினரை தமிழர் பிரதேசங்க ளில் குடியேற்றி சகல வசதிகளையும் செய்து கொடுக்கின் றது.
தமிழர்களின் சொத்து கல்வி. அதனை பெற்றுக்கொள்வதற்கு வறுமையும், வசதி வாய்ப்பும் பெரும் தடைக்கற்களாக இருப் பதால் கல்வியைக் கற்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது .
-என்றார். (ச-31)

## ஓட்டோ விபத்தில் இருவர் காயம்



திருகோணமலை,நவ.18
திருகோணமலை- மட்டக்களப்பு வீதியில் கங்கை பாலத்துக்கு அண்மையில் ஓட்டோ ஒன்று விபத் துக்குள்ளானதில் கணவனும் மனைவியும்படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.
வேகமாக வந்த மாடு ஒன்று வீதியைக் குறுக்கறுத்து செல்ல முற்பட்ட போதே ஓட்டோ விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கிழக்கு மாகாண விவசாய அமைச்சில் நடைபெற்ற மரநடுகை விழாவில் மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கலந்துகொண்டு மரக்கன்றை நட்டு வைத்தார்.

## மக்கள் போராட்டத்தைத் தடுக்க முயல்கிறது அரசு

### தண்டாயுதபாணி குற்றச்சாட்டு



மட்டக்களப்பு,நவ.18
மக்களின் போராட்டத்தை தடுக்க அரசு சதி செய்துள்ளது. சம்பூர் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு வருவதற்கு தயாரான போதும் அவர்களை திட்டமிட்டு புலனாய்வாளர்களால் தடுக்கப்பட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி குற்றம் சாட்டியுள்ளார்.
கடும் எதிர்பார்ப்புக்களுடன் இருந்த மக்களுக்கு புலனாய்வாளர்களின் மிரட்டல் அச்சத்தை ஏற்படுத்தியது என்று அவர் கூறினார்.
எமது போராட்டத்துக்கு சர்வதேச ஊடகங்கள் வருகை தராமை கவலை அளிக்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## நூல்கள் கையளிப்பு

வாசிப்பு வாரத்தை முன்னிட்டு அட்டாளைச் சேனை பிரதேச சபையால் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான கொள்வ னவு செய்யப்பட்ட நூல்கள் கையளிக்கப்பட்டன.
இந்த நூல்கள் கையளிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச சபை கூட்ட மண்டபத் தில் தவிசாளர் எம்.ஏ.அன்ஸில் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நூல்கள் அட்டாளைச் சேனை பிரதேச சபைக்குட்பட்ட அட்டாளைச் சேனை, பால முனை, ஒலுவில், கோணவத்தை,ஆலங்குளம் ஆகிய பிரதேங்களிலுள்ள நூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களிடமே கையளிக்கப்பட்டன.(ச)

# மாநகர முதல்வர் பதவியை ஏற்கிறார் நிஸாம் காரியப்பர்

அம்பாறை,நவ.18
கல்முனை மாநகரசபையின் முதல்வர் பதவியை, பிரதி முதல்வர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் இன்று திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக ஏற்கவுள்ளார்.
கல்முனை மாநகர முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய தமது இருவருட கால பதவி நிறைவை அடுத்து அண்மையில் பதவி விலகியுள்ளார்.
முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் கல்முனை மாநகரசபை முதல்வர் பதவி தொடர்பில் அண்மையில் எழுந்த இழுபறிநிலை, பின்னர் சுமுக நிலைக்கு வந்தது.



அதற்கமைய முன்னாள் முதல்வர் சிராஸின் பதவி விலகலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு பிரதி முதல்வர் எம். நிஸாம் காரியப்பர் சம்பிரதாயப் படி முஸ்லிம் காங்கிரஸினால் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.
முஸ்லிம் காங்கிரஸ் செயலர் அடுத்து வரும் இரு வருடங்களுக்கும் சட்டத்தரணி நிஸாம் காரியப்பரையே முதல்வராக தேர்தல் ஆணையாளருக்கு பரிந்துரை செய்வதுடன் 21 நாள்களில் அவரது முதல்வர் நியமனம் வர்த்தமானி மூலம் உறுதிப்படுத்தப்படவுமுள்ளன.
இந்த நிலையில் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் இன்று திங்கட்கிழமை முதல்வராக உத்தியோகபூர்வமாகப் பதவி ஏற்கவுள்ளார்.
குறித்த பதவியேற்பையொட்டி கல்முனையில் சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்குப் பெரு வரவேற்பு அளிக்கப்படவிருக்கின்றது.
அன்றைய தினம் காலை கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலிலிருந்து பெருந் தொகையான பொதுமக்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் புடைசூழ, கல்முனை மாநகர சபை பணிமனை வரை கோலாகல ஊர்வலமாக சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் அழைத்து வரப்படவுள்ளார்.
அங்கு முதல்வராக அவர் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்ற பின்னர் மாநகர சபையின் சகல கட்சி உறுப்பினர்களையும், மாநகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்களையும் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
அன்று பிற்பகல் கல்முனைத் தொகுதி அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ், மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், கட்சி முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடல் கூட்டமொன்றை நடத்தவுள் ளார்.
மக்கள் தந்த ஆணைப்படி நீதி, நேர்மையுடனும், மக்கள் நம்பிக்கைக்கு வலுவூட்டும் வகையி லும் பாரபட்சமற்ற, இனபேத மற்ற சேவையைத் தமது மேயர் பதவிக் காலத்தில் முன்னெடுப்பதுடன், மாநகர சபைப் பிரிவில் தேவையினடிப்படையில் முன்னுரிமை வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக் கவுள்ளதாகவும் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார். (ச-30)

# எந்த நேரத்திலும் என்னுடன் மோதலாம் சவேந்திர சில்வாவுக்கு மக்ரே சவால்



சனல் - 4 விவரண தயாரிப்பாளர் கெலும் மக்ரேயை விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கெலும் மக்ரே தயாரித்துள்ள விவரணப்படங்கள் தொடர்பிலேயே சவேந்திர சில்வா இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்நிலையில், எந்த நேரத்திலும் விவாதத்துக்குத் தாம் தயார் என்று மக்ரே தெரிவித்துள்ளார்.

சனல் - 4 விவரணம் நியூயோக்கில் வெளியிடப்பட்ட போது, அதில் 7 நிமிடங்கள் வரை உரையாற்றுமாறு ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பாலித கோஹனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிகழ்வுக்கு சவேந்திர சில்வாவே பொருத்தமானவர் என்று கோஹன குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே சவேந்திர சில்வா தற்போது கெலும் மக்ரேயுடன் விவாதத்தை கோரியுள்ளார்.

இந்த விவாதத்தை ஏற்றுக் கொண்டுள்ள மக்ரே, அதற்காக நியூயோர்க் செல்வதற்கு தம்மிடம் நிதி வசதியில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.



எனினும் எந்த நேரத்திலும் விவாதத்துக்குத் தாம் தயார் என்று மக்ரே தெரிவித்துள்ளார்.

## ரயிலில் வீழ்ந்து மரணம்

பேராதனைப் பகுதியில் ரயிலிலிருந்து விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயிலிலிருந்து விழுந்தே இவர் பலியாகியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் இது வரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட முஸம்மிலுக்கு எதிராக விசாரணை

## ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்



கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட கொழும்பு மாநகர சபை மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மிலுக்கு எதிராக விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மாறாக அக்கட்சியின் ஆளுகைக்குட்பட்ட கொழும்பு மாநகர சபை மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மாநாட்டில் கலந்துகொண்டமைக்காக இந்த விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

## பொதுநலவாய இளைஞர் பேரவைக்கு ஒரு இலட்சம் அமெ. டொலர் நிதியுதவி வழங்கியது பாகிஸ்தான்

பொதுநலவாய இளைஞர் பேரவைக்கு பாகிஸ்தான் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை பாகிஸ்தான் பிரதமர் மொஹமட் நவாஸ் ஷரீப் அறிவித்துள்ளார்.

இந்த பொதுநலவாய இளைஞர் பேரவை கொழும்பில் அமைக்கப்படவிருக்கின்றது.

# மாநாட்டு வேளையில் சர்வதேச சமூகத்தின் அவதானத்தைப் பெறத் தவறியது மலையகம்

## மனோ கணேசன் கவலை

கொழும்பில் நடந்து முடிந்த பொதுநலவாய மாநாட்டின் போது, மாநாட்டில் கலந்து கொண்ட உலக தலைவர்களினதும், சர்வதேச ஊடகர்களினதும் கூட்டு கவனத்தை பெறுவதற்கு மலையகம் தவறி விட்டது. இது வரலாற்று தவறு ஆகும். இந்தத் தவறுக்கு மலையகத்தை ஏதோ ஒரு வகையில் பிரதிநிதித்துவம் செய்யும் எல்லா அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், தொண்டு நிறுவனங்களும், பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.


இது தொடர்பாக வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு நானும் பொறுப்பேற்று கொள்கிறேன். ஆனால் என்னால் தார்மீக பொறுப்பு மட்டுமே ஏற்று கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் மலையக பிரச்சினைகள் இடம் பெறாதது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால், மண்டபத்துக்கு வெளியே வடக்கிலும், கொழும்பிலும் நடைபெற்ற கவன வீர்ப்பு போராட்டங்களை ஒத்த போராட்டங்கள் மலையக அவலங்களை வெளிக்கொணர மலையகத்தில் இடம்பெறாதது வரலாற்று தவறு ஆகும். சர்வதேச ஊடகர்களை மலையகத்துக்கு கொண்டுவர முடியாமல் போனது ஜீரணிக்க முடியாதது ஆகும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்த சந்தர்ப்பம் மிக சரியான முறையில் பயன்படுத்தி கொள்ளப்பட்டது.

வடக்கு-கிழக்கு தமிழ் உடன்பிறப்புகளின் அவலங்கள், பல்லாண்டுகளாக சர்வதேசமயமாக்கபட்டதன் நல்விளைவே



இதுவாகும்.

மலையகத்தில் சிவில் சமூகம் இருக்கவேண்டும் என நீண்டகாலமாக சொல்லி வருகிறேன். இன்றும் மலையக சிவில் சமூகம் ஊடகங்களில் மாத்திரமே இருக்கின்றது. நிஜத்தில் இல்லை. ஆளுவோருக்கு சாதகமாக அவர்களுக்கு வலிக்காமல்தான் அறிவுரை சொல்வோம் என்றும், அதையும்கூட ஒளிந்து நின்றுதான் சொல்லுவோம் என்றும் சொல்லும் நபர்களை நான் மலையக சிவில் சமூகமென ஏற்று கொள்ளமாட்டேன். வடக்கு கிழக்கில் தமிழ் சிவில் சமூகம் அப்படி செயல்படவில்லை. அதைப் பார்த்து பாடம் படிக்க வேண்டும் - என்றார்.

## வாகனம் மோதி முதியவர் பலி!

கம்பஹா பொலிஸ் பிரிவு கொழும்பு - கண்டி பிரதான வீதியின், வெருல்லவத்தை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த வான் ஒன்று, சைக்கிளை தள்ளிக்கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் மீது மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த முதியவர் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது, உயிரிழந்துள்ளார்.

யக்கல பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

பிரேதப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

# தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையிட்டு வந்தவர் பொலிஸாரிடம் மாட்டினார்

பல்வேறு பகுதிகளில் தங்கச் சங்கிலிகள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர், சிலாபம் ஆராச்சிக்கட்டு பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சந்தேகத்தின்பேரில் கைதான இவரிடம், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளது.

முந்தல் பொலிஸ் பிரிவின் மதுரங்குளி ரயில் நிலையத்தில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி, பட்டுலுஓய ரயில் நிலையத்தில் இரண்டு இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலி என்பன இவரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேலும் சிலாபம் பொலிஸ் பிரிவில் 70 ஆயிரம் பெறுமதியான தங்கச் சங்கிலி, ஆராச்சிக்கட்டு ரயில் நிலையத்தில்



77 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி என்பனவும் சந்தேகநபரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை, பாலாவி பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபரால் கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலிகள் சில கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சிலாபம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

# துப்பாக்கி முனையில் பெண் மீது பாலியல் வல்லுறவு

## இளைஞர் சிக்கினார்



களுத்துறை தெற்கு பகுதியில் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி வீடொன்றினுள் புகுந்த குறித்த இளைஞர், துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அங்கு நின்ற பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதன்படி நேற்றுமுன் தினம் வஸ்கடுவ பகுதியைச் சேர்ந்த 33 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வசமிருந்து துப்பாக்கி, ரவைகள், கையடக்கத் தொலைபேசி, கைக்குண்டு, ரப்பர் முத்திரை, கத்தி உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கான்ஸ்டபிளும் மனைவியும் படுமோசமாக வெட்டிக்கொலை

கொழும்பு, நவ.18

பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் அவரது மனைவி ஆகியோர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுடைய நான்கு வயதுக் குழந்தை வெட்டுக்காயங்களுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மாத்தறை, உல்லல எனுமிடத்தில் இடம்பெற்றுள்ளது என்று மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் 33 வயதானவர் எனவும் அவரது மனைவி 30 வயதானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த சில தினங்களாக ஹெரோயின் போதைப் பொருள் சுற்றிவளைப்பை மேற் கொண்டிருந்தார்.

இதன் பின்னணியிலேயே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பின்னடிக்கப் பின்னடிக்க பெறுபேறு மந்தமுறும்...

ஐக்கியநாடுகள் சபையின் ஆதரவுடன் இலங்கை மீது திணிக்கப்படும் எந்த வகையான அனைத்துலக விசாரணையையும் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் . இலங்கை அரசு இவ்வாறு அடித்துக் கூறியுள்ளது.

ஏனைய நாடுகள் தமது எண்ணங்களை எம்மீது திணிப்பதனை. ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆவேசத்தைக் கக்கியுள்ளார் மூத்த அமைச்சரும் நாடாளுமன்றின் சபை முதல்வருமான நிமல் சிறிபால டி சில்வா.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கை அரசுக்கு நான்கு மாத காலக் கெடு விதிக்கும் வகையில், அனைத்துலக விசாரணை தவிர்க்க முடியாதது என்று தெரிவித்த கருத்துக்குப் பதிலடியாகவே, அமைச்சர் சிறிபால டி சில்வா மேலே குறிப்பிட்ட தொனியில் துள்ளிக் குதித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றவை என்று கூறப்படும் போர்க் கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில், இந்நாட்டு அரசு சுயாதீனமான விசாரணையை நடத்த வேண்டும். அதனைச் செய்வதற்குத் தவறினால், அனைத்துலக மட்டத்தில் விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரிட்டன் கோரும் - இவ்வாறு அந்நாட்டின் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்தமைக்குப் பதிலாகவே, அமைச்சர் சிறிபால டி சில்வா ஆவேசப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்கு, 2014 மார்ச் வரை இலங்கை அரசுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அது தவறும் பட்சத்தில், சுயாதீனமான அனைத்துலகமட்ட விசாரணை தவிர்க்க முடியாதது - என்றும் பிரிட்டனின் பிரதமர் அழுத்திக் கூறியுள்ளார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்தே அனைத்துலக விசாரணை நடத்துவதற்கு அழைப்பு விடப்படும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

மறுபுறத்தே, இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், அரசாங்கம் உள்நாட்டு வரன்முறைகளுக்கு அமைவாக விசாரணைகளை மேற்கொள்ளும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

எந்த வகை அழுத்தங்களின் அடிப்படையிலும் அல்லாமல், விசாரணையை எவ்வாறு மேற்கொள்வது என்பதனை எமது அரசாங்கமே தீர்மானிக்கும் என்றும் அவர் அழுத்திக் கூறி உள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது, அதன் இறுதிக் கட்டத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபை தனது அதிகாரத்தைப் பயனன்படுத்தத் தவறிவிட்டதாக அதன் செயலாளர் நாயகம் கழிவிரக்கத்துடன் ஒப்புக்கொண்டார் என்பது ஊன்றிப் பதிவாகி உள்ளது.

இந்நாட்டில் நடைபெற்ற போரின் போது அப்பாவித் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டமைக்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்பு கொழும்பு அரசாங்கத்திடமே முழுக்க முழுக்க உண்டு.

வெளிநாட்டுத் தலைவர்கள் வடக்கே வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த பின்னரும், 'கோயக்கம் மாயக்கம்' செய்யும் பாணியில் தானே விசாரணையை நடத்தப் போவதாக இலங்கை அரசு கூறுவதனை, அனைத்துலகம் ஏற்றுக் கொள்ளும் அல்லது அங்கீகரிக்கும் என்று எந்த வகையிலும் எதிர்பார்க்க இயலாது.

போர்க் குற்றம் குறித்த விசாரணை, அனைத்துலக நியமங்களுக்கு நியதிகளுக்கும் ஏற்புடைத்தாக நடத்தப்படுவதே ஜனநாயக தர்மம்.

தன்மீது அனைத்துலக அரங்கினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை தானே விசாரிக்க வேண்டும்; உண்மையைக் கொண்டு வர வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றுவிட்டால் மட்டும் நீதியை நிலைநாட்ட முடியாது. அது ஏற்புடையதும் அல்ல; அதற்கு அனைத்துலகம் இசைந்து கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதும் ஒவ்வாத ஒன்றாகும்.

**இலங்கையில், போர் முடிவுற்ற பின்னரும் தமிழ் மக்களின் மனித உரிமைகள் உட்பட்ட ஜனநாயக உரிமைகள் முழு அளவில் அவர்களுக்குச் சேரவில்லை, கிடைக்கவில்லை என்ற யதார்த்தத்தை மூடி மறைக்க முடியாது.**

அதனையே , பொது நலவாய மாநாட்டுக்கு வருகை தந்த தலைவர்களில் பலர் கண்டும் கேட்டும் அறிந்திருப்பர். அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட, இலகுவில் செயற்படுத்தக்கூடிய பல கருமங்கள் வேகம் குன்றியே அரங்கேறுகின்றன.

இந்த இலட்சணத்தில், மனித உரிமை மீறல் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்த வேண்டும் என்ற அனைத்துலக வலியுறுத்தலைத் தட்டிக் கழிக்கும் நோக்கும் போக்கும் ஏற்புடையதல்ல.

அதனை உணர்ந்து கொள்வதற்கு அரசு பின்னடிப்பது, ஏதோ வகை சார்ந்த உள் நோக்கம் அதனிடம் உண்டு என்பதனையே பிரதிபலிக்கிறது. எதற்கும் காலம் பதில் கூறும் என்பதனை மட்டுமே இப்போது தொட்டுக் காட்டலாம்.

எந்த விவகாரத்திலும், சம்பந்தப்பட்ட தரப்புகள், பின்னடிக்கப் பின்னடிக்க பெறுபேறு மந்தமுறும் என்ற நியமம் இந்நாட்டு அரசுக்கு எப்போது புலப்படுமோ...!

# மன்மோகன் வராமையால் கடுங்கோபத்தில் இலங்கை

## உறவு நிலை பாதிக்கப்படலாம்

சண்டே ரைம்ஸ். கட்டுரையில் இருந்து
-கோகுலன்

நேற்றுடன் முடிவடைந்த பொதுநலவாய நாடுகள் தலைவர்களின் மாநாடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு கடுமையான புதிய சவால்களை உருவாக்கியுள்ளது. சில முக்கிய வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் தொடர்பான பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. அவைகளில் ஒன்று இலங்கையின் முக்கிய அண்டை நாடான இந்தியாவுடனான உறவு கள் பற்றியதாகும்.

கடந்த காலங்களைப் போல் மேற்குலக நாடுகளுடனான உறவுகளில் நம்பிக்கை வைத்திராமல் ஆபிரிக்க நாடுகள் பக்கம் இலங்கை தன் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்ற வகையிலான ஜி.எல்.பீரிஸின் கொள்கை தோல்வி கண்டுள்ளமை இன்னொரு விடயம். சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கான வழி இது வெனஅவர்நம்பிவந்தார். ஆனால்மில்லியன் கணக்கில் பல மாதங்களாக பொதுநலவாய மாநாட்டுக்கு செலவழித்ததன்பின்னர் அது வெறும்பகல் கனவு என்பது தெரிய வந்துள்ளது.

உள்நாட்டு பிரச்சினைகளைப் பொறுத்தவரை கடந்த வெள்ளிக் கிழமை நெலும் பொக்குன தேசிய கலை அரங்கில் மிக விமரிசையாக ஆரம்பமான பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சிகள் எதுவும் பிரசன்னமாய் இருக்கவில்லை என்பதாகும். அந்த நிகழ்வை சகல எதிர்க்கட்சிகளும்பகிஷ்கரித்திருந்தன. எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மாநாட்டில் கலந்து கொள்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவர் கலந்துகொள்ளாமல் போனமைக்கு காரணம் தெரிவிக்கப்பட்டது.

அரச சார்பு ஏற்பாட்டாளர்களால் எனது அதிகாரப் பூர்வ வாகனம் தாக்கப்பட்டு ஐ.தே.க.தலைமையிலான சிறிகோத்தாவுக்குள் செல்வது தடுக்கப்பட்டது என்று விக்கிரமசிங்க பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அதனால் ஐ.தே.க வின் தலைமைத்துவ சபை அதன் முதல் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றியது. ஆர்ப்பாட்டக்காரர்களால் இரண்டாவது நாளாகவும் தமது கட்சி காரியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்றார் ரணில். இந்த நிலையில் எதிர்க் கட்சித் தலைவரை கலந்து கொள்ளச் செய்வதற்காக ஜனாதிபதி ராஜபக்ஷ தொலைபேசியில் அழைப்பு விடுத்தார். அந்தச் சம்பவம் குறித்துத் தாம் அறிந்திருக்கவில்லை யென்றும் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அதன் பிறகு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ரணிலுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்திருந்தார். இருந்த போதிலும் தமது அதிகாரங்களில் சிலவற்றை தலைமைத்துவ சபைக்கு விட்டுக் கொடுத்துள்ள விக்கி ரமசிங்க அந்தச் சபையின் தீர்மானத்தின்படியே மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென்று முடிவெடுத்தார். புதிதாக தலைமைத்துவ சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளதன் காரணமாக ஐ.தே.க. இப்போது சில கடினமான தீர்மானங்களை எடுக்கத் தொடங்கி யிருக்கிறது. இது ஒரு திருப்பு முனை என்றும் கொள்ளலாம்.

இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையானது இரண்டு முக்கிய விடயங்களின் மீது தீர்மானிக்கப்படவிருந்தது. இந்திய நாடாளுமன்ற தேர்தல்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அளவில் நடைபெறவிருக்கின்றன. காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் தி.மு.கழகத்தின் ஆதரவைப் பெற்றிருந்தால்தான் வெற்றி பெற முடியும். தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, மன்மோகன்சிங் மாநாட்டுக்குப் போகலாகாது என்றே கூறி வந்துள்ளார். மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம் (நீதித்துறை) ஏ.கே.அந்தோனி (பாதுகாப்பு), ஜயந்திநடராஜன் (சுற்றாடல், வனத்துறை) ஆகியவர்களும் அதே கருத்தை வலியுறுத்தியிருந்தார்கள். ஆனால் இந்திய வெளியுறவுத் துறையும் இலங்கையிலுள்ள அதன் உயர் ஸ்தானிகரும் சவுத் புளக்கிலுள்ள அதிகாரமிக்க அனைவரும் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வதை ஆதரித்தார்கள். இலங்கையுடன் தொடர்புகளைப் பேண வேண்டும் என்றும் பிரதமர் கலந்து கொள்ளாமல் விடுவது இந்தியாவுக்கு நன்மை பயக்கமாட்டாது என்றும் அவர்கள் வாதிட்டார்கள். பிரதமர் சிங் மாநாட்டில் கலந்து கொள்ள வருவார் என்ற எண்ணம் கடந்த ஒக்ரோபரில் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் இரண்டு நாள் பயணத்தின் காரணமாக இலங்கைத் தலைவர்கள் மத்தியில் வலுப்பெற்றிருந்தது. அவர் வருவார் என்ற நம்பிக்கையில் இரகசியமாக நடைபெற்ற சில நகர்வுகளையடுத்து திருகோணமலையில் சம்பூரில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பான அனல் மின் நிலையத்தை இந்தியா ஆதர வில் அமைப்பதற்கான திட்டத்துக்கு இலங்கை அரசுத் தலைவர்கள் சம்மதித்தனர். குர்ஷித் இந்தத் திட்டங்களில் கையெழுத்திட்டதன் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் மேலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக இருந்தது. அந்த வகையிலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரச மற்றும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளின் கடும் எதிர்ப்புகள் இருந்த போதும் அவைகளைச் சமாளித்துக்கொண்டு மாநாட்டுக்கு வருவார் சிங் என்று இலங்கை ஆட்சியாளர்கள் கருதியிருந்தார்கள். ஆனால் அவர் வராமல் போனமை இலங்கைத் தலைவர்களுக்கு பெரும் மனக் கஷ்டமாகவே இருந்துவிட்டது.

இந்த விடயம் ஜனாதிபதி அண்மையில் தமது நெருங்கிய ஆலோசகர்கள் மற்றும்அதிகாரிகளுடன்பேசிக்கொண்டிருந்தபோது தலைதூக்கியது. உள்நாட்டில் எதிர்ப்புகள் இருந்தாலும் பல விடயங்களில் இந்தியாவுக்கு ஆதரவாக தாம் நகர்வுகளை மேற் கொண்டதாகவும் சம்பூர் அனல்மின் ஆலை அமைப்பைக் கூட இந்தியாவுக்கு விட்டுக்கொடுத்திருப்பதாக ராஜபக்ஷ தெரிவித்தார். வடக்கில் தேர்தல் நடத்தும்படி இந்தியா கோரியது அதற்கும் நாம் இணங்கினோம். 28 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாநிலம் எவ்வாறு பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாமல் தடுக்க முடியும் என்று கூறினார். என்றாலும் கடந்த வியாழனன்று செய்தியாளர்களிடம் ஜனாதிபதி பேசிய போது இந்தியப் பிரதமர் வரமுடியாமல் போனமைக்கு தமிழ் நாட்டில் உருவாகியுள்ள நிலைமைதான் காரணம் என்று அவர் தமது கடிதத்தில் கூறியிருக்கவில்லை என்றார். இந்த நிலைமையில் இலங்கையின் உள் விவகாரங்களான 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இந்தியாவுடன் ஆலோசிக்கத்தான் வேண்டுமா என்றும் ஜனாதிபதி கேட்டார். மேலும் இந்த விடயங்கள் தொடர்பாக இந்தியாவின் கருத்துக்களுக்கு நாம் செவி மடுக்கத்தான் வேண்டுமா என்றும் கேள்வி எழுப்பினார்.

இலங்கை இந்தியா விடயத்தில் மிக முக்கியமான 13 ஆவது திருத்தம் தொடர்பாக மட்டுமன்றி மிக சின்ன விடயங்களிலும் கடுமையான போக்கை கடைப்பிடிக்கவிருப்பதாக அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. அப்படியான ஒரு விடயமாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக புலிகளின் ஆயுதக் கொள்வனவாளராக இருந்தவரான குமரன் பத்மநாதனை (கேபி) விசாரிக்க அனுமதிப்பதற்கான கோரிக்கையையும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த விடயங்களில் சட்டம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அம்சங்கள் இருந்த போதிலும் இந்தியாவுடனான உறவுகளை உறை நிலையில் வைத்துக் கொள்ள எடுக்கப்படும் எந்த நகர்விலும் அபாயகரமான அம்சங்களும் இருக்கவே செய்கின்றன என்பதை மறந்துவிட லாகாது. பதிலுக்குப் பதில் செயற்பாடுகளை எதிர்பார்க்க வேண்டும்.

அப்படியான ஒரு நிலைப்பாட்டை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாட்டின் போது காணலாம். மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருக்கிறது. இந்த முறை பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்துள்ள கனடா அமெரிக்காவுடன் இணைந்துகொண்டு கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இரட்டிப்பாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கலாம். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் புலம் பெயர்த் தமிழர்களின் ஒன்பது வெவ்வேறு குழுக் களைச் சந்தித்திருந்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி டேவிட் கமரூன் அவர்களிடம் பேசும் போது இலங்கை அரசு உள்ளக விசாரணை ஒன்றை நடத்தாவிடத்து சர்வதேச விசாரணை ஒன்றுக்கு வலி யுறுத்தப் போவதாக வாக்குறுதியளித்திருந்தார்.

ஒக்ரோபரில் சல்மான் குர்ஷித் வருகையின் பின்னர் இலங்கை- இந்திய உறவில் ஏற்பட்டிருந்த சகஜ நிலையின் காரணமாக சம்பூர் அனல் மின் நிலையத்துக்கான ஒப்பந்தத்தை மன்மோகன் சிங் மாநாட்டுக்கு வருவார் என்ற நம்பிக்கையில் இலங்கை அதிகாரிகள் செய்து கொண்டார்கள். இப்போது இலங்கை அரசின் உயர்மட்டத்திலுள்ளவர்கள் இந்தியாவுடனான உறவுகளைஉறை நிலையில் வைத்துக்கொள்வது தொடர்பாகவே ஆலோசித்து வருகிறார்கள்.



# ஆரோக்கியமாய் வாழ உடல்நலம் காப்போம்



ஆரணி

தினசரி வாழ்க்கையில் எது எதற்கோ நேரம் ஒதுக்கும் நம்மால், எங்களின் உடல் நலனுக் காக ஒரு அரை மணி நேரம்கூட ஒதுக்க முடியவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. இரவு பகல் பாராமல் ஓடியாடி பணம் சேர்ப்பவர்கள் இருக்கிறார் கள். ஆனால் சேமித்த பணத்தை அனுபவிக்க ஆரோக்கியமான வாழ்க்கை வேண்டும் என்பது இவர்களின் புத்திக்கு எட்டாமல் போய்விடுகிறது.

பொதுவாக நாங்கள் செய்யும் வேலைகளான வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குச் சென்று பால், பேப்பர், காய்கறி என்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை நடந்து சென்று வாங்கி வந்தால், வீட்டு வேலையோடு சேர்த்து நடைப்பயிற்சியும் செய்ததுபோல் ஆகும்.

இதேபோல் வீடு மற்றும் வாகனாங் களைச் சுத்தம் செய்தல், துணி துவைத்தல் போன்ற சிறுசிறு வேலைகளைச் செய்தாலே போதும் நம் உடல் ஆரோக்கிய மாக இருக்கும்.

ஆனால் சிலர், ஓய்வெடுக்கிறேன் என்று எல்லா வேலைகளுக்கும் வேலைக்காரர்களை நியமித்து விட்டு, குடும்பத்திலுள்ள சிறியவர், பெரியவர் அனைவரும் ஒன்றி ணைந்து, நொறுக்குத்தீனிகளை தின்றபடி டி.வி. முன் அமர்ந்து நிகழ்ச்சிகளை ரசிப்பதால் தங்க ளின் உடல் மற்றும் மன நல னுக்குத் தாங்களே வேட்டு வைத் துக் கொள்கின்றனர்.

**உடற் பயிற்சி அவசியம்**

குடும்பத்திலுள்ள அனைவரும் தினமும் ஜிம்முக்குச் சென்று உடற் பயிற்சி செய்வது என்பது நடை முறையில் சாத்தியமில்லை. அதை விட வீட்டிலேயே ஒரு அரை மணி நேரம் மிக எளிமையான உடற் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்து உடல் நலனை தக்க வைத் துக் கொள்ளலாமே?

இந்த விடயத்தில் இளைஞர்களும், இளம் பெண்களும்கூட போதிய விழிப்புணர்வின்றியே இருக்கிறார் கள்.

உடையலங்காரத்துக்கும், சிகைய லங்காரத்துக்கும் காட்டும் அக்க றை யில் கொஞ்சமாவது உடல் ஆரோக் கியத்திலும் காட்ட வேண்டாமா?

ஒருபுறம் உடல் ஆரோக்கியத்தில் அக்கறையின்மையாலும் மறு புறம் தீய பழக்கங்களாலும் தங்கள் உடல் நலனைச் சீரழித்துக் கொள் ளும் இன்றைய சமுதாயத்தில், பெண்களும், ஆண்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்களில்லை என நிரூபித்து வருவதை மேலைத் தேய கலாசாரத்தால் சீரழிந்த வளர்ந்த நகரங்களில் கண் கூடாகவே காண முடிகிறது.

**பெற்றோரே வழி காட்டவேண்டும்**

இவ்வளவு இடையூறுகளையும் தாண்டி, ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைப் படைப்பது என்கிற சவாலான காரியம் பெற்றோர் களின் கைகளில்தான் இருக்கிறது. பெற்றோரின் அறிவுக்கு எட்டாத மிதமிஞ்சிய விஞ்ஞான வளர்ச்சி குழந்தைகளின் கைகளில் கைபேசி யாகவும், கணினியாகவும் சிக்கி யிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாவிடினும், அவற்றைப் பயன் படுத்தும் குழந்தைகளைக் கண் காணிக்கலாமல்லவா?

அவர்கள் தவறான பாதையில் தடம் மாறாமல் இருக்க, அதிகாலை துயில் எழும் பழக்கம், தினசரி இறை வழிபாட்டில் ஈடுபாடு, வீட்டி லேயே எளிய உடற்பயிற்சி அல்லது யோகா செய்தல் என நாமும், நம் குழந்தைகளும் பயிற்சிகளில் ஈடுபடும்போது நமது குடும்பத்தில் ஆரோக்கியம் மற்றும் நல்லொழுக் கம் தழைத்தோங்கும். இதுபோன்ற பயிற்சிகளை பள்ளி களிலும் கட்டாயமாக்கி, மாணவர் களைத் தொடர்ந்து பழக்கப்படுத்தி அவர் களைச் செம்மைப்படுத்த வேண்டும்.

> வீட்டிலேயே ஒரு அரை மணி நேரம் மிக எளி மையான உடற் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்து உடல் நலனை தக்க வைத்துக் கொள்ளலாமே?

---

கு.கோபிராஜ்.
சண்டிலிப்பாய்.

# வழுக்கையாறும், இடிகுண்டு நீர்த்தேக்கமும்

யாழ்ப்பாண குடா நாட்டில் 16 கிலோ மீற்றர் நீளமான பருவ கால ஆறு வழுக்கையாறாகும். இதன் மூலம் வலிகாமம் வடக்கு, வலி காமம் தெற்கு, வலிகாமம் தென் மேற்கு ஆகிய பிரிவுகள் அதிகம் நன்மை பெற்றாலும் வலிகாமம் மேற்கு அதிக நன்மைகளை பெறு கின்றன. இது தெல்லிப்பழையில் ஆரம்பமாகி அளவெட்டி, கந்தரோடை, கட்டுடை, மானிப்பாய் நவாலியூடாக அராலியை அடைகிறது. இதனது வடி நிலப் பிரதேசம் 49 சதுர மைல் ஆகும். வடி நிலத்தில் பூதன் குளம், பிணக்கைக் குளம், கட்டுவயல் குளம், அம்பனைக் குளம், ஆலம்குளம், ஐயனார் கோயில்குளம், முதலியார் குளம் ஆகிய முக்கிய குளங்கள் ஆகும். கந்தரோடை, ஐயனார் கோயிலடி, நவாலி, அராலி போன்ற பகுதியில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த கதவுகள் அமைக்கப்பட்டன.

வலிகாமம் மேற்கில் குறிப்பாக 325 ஹெக்ரேயரில் இருந்து 480 ஹெக்ரேயரில் இந்த வெடி நிலத்தில் தடுப்புக் கதவுகள் மூலம் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்க முடியும். இதனால் குறித்த வடிநிலத்தில் தற் போது பயிர்ச் செய்கை மேற்கொள் ளப்படுகின்றது.

இந்த ஆற்றின் வடக்கு மேற்கு பகுதியில் பெரும்பகுதி தரிசு நிலமாய் உள்ளது. இதில் பெரும் பகுதி பொருளாதார வளர்ச்சிக்கு பயன் படாது உள்ளது.

**பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம்**

இந்தப் பகுதியில் குடியிருப்பு, பொழுதுபோக்குமையம், கைத்தொழில் போன்றன அமைத்து பயன்படுத்த முடியும். குறித்த பகுதி தரைக்கீழ் நீரில் தங்கியி ருக்க வேண்டிய தேவையுண்டு. இதைவிட அராலியில் வழுக்கையாற்று கழிமுகம், பறவைகள் சரணால யம் விருத்தி செய்யப்பட்டால் அபி விருத்திக்கு பயன்பாடாக இருக்கும்.

வழுக்கையாற்று பள்ளத்தாக்குக்கு மேற்குப் புறமாக மாசியப் பிட்டி பொது சந்தைக்கு அருகில் சிவன் கோயில் ஒன்று இடிபாடுகளுடன் காணப்படுகின்றது.

பண்டைய காலத்தில் வழுக்கை யாற்றினை பயன்படுத்தி உரோம வியாபாரிகள் வியாபாரம் செய்த னர். தற்போதைய உடுவில், மாசி யப்பிட்டி சந்தைக்கு இடையே தோணித்துறை ஒன்றினை திரும்பு துறை என்று அழைத்தனர். இது தற்போதைய உடுவில் குளத்தில் ஒரு முனையைக் குறிப்பிட்டு நிற் கின்றது. இதற்குப்புதைந்த மரத்தோணி யின் பல பாகங்கள் சான்றாகின்றன. அத்துடன் உரோம வியாபாரிகளது நாணயங்களில் பெருமளவு வழுக் கையாற்று பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

**இடிகுண்டு நீர்த்தேக்கம்**

இது 400 வருடம் பழைமை யானது என சிலர் தெரிவித்த போதும் இது 150-170 இடைப்பட்ட வருடம் என்பர். இது ஆரம்பத்தில் 3-5 அடிக்கு இடைப்பட்ட ஒரு துவாரமாகக் காணப்பட்டது. இது இயற்கையாக உருவாகியது. பின் னர் காலத்துக்குக் காலம் இடிந்து போய் கொண்டு இருப்பதனால் இது இடி குண்டு என்ற பெயரைப் பெற்றது.

கடந்த 30 வருட சுற்று வட்ட அளவை விட தற்போதும் 2 மடங் காக உள்ளது. இதில் 10 வருடங் களுக்கு முன்பு ஒருபோதும் நீர் வற்றிப் போவதில்லை. ஆனால் இன்று முற்றாக நீர் வற்றுவதைக் காணமுடிகின்றது. எனினும் அடிப் பகுதி வறண்டு போவதில்லை. இதன் நீர் மட்டம் குறையும் போது அயற் கிராமங்களிலும் கிணறுகளில் நீர்வற்றிப் போகின்றது. அத்துடன் அயலில் உள்ள வயல் காணி களிலும் உவர்தன்மை அதிகரிக்கிறது.

இடி குண்டின் அடியில் இருந்து சிமெந்துக் கட்டு, கிணறு போன்று செங்குத்தாகவோ, குளம் போன்ற சாய்வாகவோ அமைக்கப் படவேண் டும். விவசாயத்துக்கு வெளியே நீர் இறைக்கும் இயந்திரம் வைத்து நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அமைப்பு அவசியம்.

இடி குண்டுக்கு வரும் வெள்ளம் நீர் நிலை நிரம்பிய பின்பு வெளியேறு வதற்கு வழி அமைக்க வேண்டும். அதற்கு3½ அகலமும் 200 அடி நீளமும் கொண்ட வரம்பு இடி குண்டில் இருந்து வழுக்கையாற்றின் வாய்க் கால் வரை உள்ளது. இது சிறிய வாய்க்காலுடன் கூடிய சிமெந்து கட்டாக மாற்றியமைக்க வேண்டும். இடிகுண்டில் இருந்து நீர்ப்பாச னத்துக்கான சிமெந்து வாய்க்கால் 300 நீளத்துக்கு தேவை. கால் நடை கள் நேரடியாக தண்ணீர் பெற சாய் வாக அமைக்கப்பட வேண்டும். இடி குண்டில் சேறு அகற்றி, சுற்றிவரமண் அணை அமைக்க வேண் டும். இடி குண்டின் உள்ளே மண் இடிந்து விழு வதால் அதை தடுக்க வேண்டும்.



**வழுக்கையாற்றை பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய எதிர்காலத் திட்டங்கள்**

வழுக்கையாற்றுத் திட்டத்தின் விவ சாய அபிவிருத்தி என நோக்கும் போது நீண்ட கால நோக்கமாக விவசாய, கால்நடை அபிவிருத்தி மேம்படுத்தி எதிர்கால மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.

குறுங்கால நோக்கமாக கிராமத்து வளங்களை இனங்கண்டு, எதிர் நோக்கும் பிரச்சினையை இனங் கண்டு அதை தீர்வு முன்வைத்தல்.

நீர்வளத்தை மேம்படுத்தல் வழுக் கையாற்று வாய்க்கால் புனரமைத் தலுடன் விவசாய கிணறுகளை புனரமைத்தல்.

சோளச் செய்கை, குரக்கன் செய்கை, நிலக் கடலை, அவரைச் செய்கை போன்றவற்றுக்குப் பயிற்சிகளை வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

சூரிய மின்கலத்துடன் இணைந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தலாம்.

பழச் செய்கையை ஊக்கப்படுத்துவ துடன் சந்தைப்படுத்தல் வசதிகளை உருவாக்கி வீட்டுத் தோட்டம் ஒருங்கி ணைந்த பண்ணை போன்ற வற்றை உருவாக்குதல்.

எமது கையில் இந்த வழுக்கியாறு இடிகுண்டு நீர்த்தேக்கம் போன்றன சிறந்த வளங்களாக எமக்கு இருக்கின் றன. இனிவரும் காலத்தில் இவற்றை உரியவாறு பயன்படுத்தி அபிவிருத்தி யில் மேல் நோக்கிச் செல்வோம்.

# புனரமைக்கப்படுமா மந்துவில் வடக்கு வீதி

தென்மராட்சி, நவ. 18
மந்துவில் வடக்குப் பகுதியில் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக வீதி புனரமைக் கப்படாததால் மாணவர்க ளும் பொதுமக்களும் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.
வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதியில் வசிக்கும் 150 இற்கு மேற் பட்ட குடும்பங்கள் கையொப்ப மிட்டு உரிய அதிகாரிக ளுக்கு மனு வழங்கிய போதி லும் இதுவரை புனரமைக் கப்படவில்லை எனத் தெரி விக்கப்பட்டது.
மந்துவிலிலிருந்து தச்ச காடு மயானத்துக்குச் செல் லும் வீதியே புனரமைப் பின்றி காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
மழை வேளைகளில் மயா னத்துக்கு வரும் வாகனங் கள் இடை நடுவில் நிறுத் தப்பட்டு பூதவுடலை பெட்டி யுடன் தோளில் சுமந்து செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

“ ”

50 வருடங்களுக்கு மேலாக வீதி புனர மைக்கப்படாததால் மாணவர்களும் பொதுமக்களும் சிரமங் களை எதிர்நோக்கு கின்றனர்.



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் உள ஆற்றுப்படுத்தலும் சமூக விழிப்புணர்வும் தொடர்பான செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி கரித்தாஸ்- கியூடெக் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயலமர்வில் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் தொடர்புடைய வெளிக்கள அலுவலர்கள் மற்றும் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை உளநல மருத்துவ நிபுணர் மா.ஜெயராஜா, மாவட்ட செயலக உளவள அலுவலர் தே.துஷ்யந்தன், மருத்துவமனை உள சமூகப் பணியாளர் இ.ராஜேந்திரா ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-9)

# பரிசில் வழங்கல்

தென்மராட்சி,நவ.18
மீசாலை பொது நூலகத் தினர் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதி நிகழ் வாக பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பி.ப 1.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.
சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக நகர சபையின் உறுப்பினர்க ளான அ.பாலமயூரன், பொ.செல்வரத்தினம், ப.சிறிதரன் மற்றும் செய லாளர் கா.சண்முகநாதன், சன சமூக அபிவிருத்தி அலு வலர் த.கிருபாகரன்,ஓய்வு நிலை நூலகர் திருமதி க.கணேசானந்தம் ஆகி யோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் நூல்கள் அன்ப ளிப்புப் பெறல், வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக் கும் வகையிலான துண்டுப் பிரசுர விநியோகம், பரிசில் வழங்கல் ஆகியவையும் இடம்பெறும். (வ-9)

# தண்ணீரென மண்ணெய் குடித்த குடும்பஸ்தர்

தென்மராட்சி,நவ.18
தாகத்தின் போது பச்சை சோடாப் போத்தலுக்குள் வைக்கப் பட்டிருந்த மண்ணெண்ணெய்யைத் தண்ணீரெனத் தவறுதலாக நினைத்துக் குடித்தார் குடும்பஸ்தர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம் பெற்றது.
கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த 34 வயது குடும்பஸ்தரே தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (வ-9)

# பெற்றோருக்கான செயலமர்வு

பூநகரி,நவ.18
சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் திட்டத்தின் (சிபிஆர்) தொண்டர்களுக்கும் பெற்றோருக்குமான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.
செயலமர்வில் சமூக சேவைகள் திணைக்கள தலை மைப்பீட சமூக சேவைகள் அலுவலர் நா.ராஜமனோகரன், கிளிநொச்சி மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிலைய அலுவலர் எஸ்.பிரேம்குமார், பூநகரி பிரதேச சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (வ-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்:** அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டிவிடாதீர்கள். யாருக்காகவும் பிணை கையெழுத்திட வேண்டாம். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**கடகம்** : புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி:** சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை ஓரளவு குறையும்.

நாளை

கார்த்திகை-03 செவ்வாய்க்கிழமை 19.11.2013
திதி: துதியை மு.இ.11.30 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.ப.03.54 வரை
சுபநேரம்: 10.39 - 12.09 வரை
இராகுகாலம்: 03.09 - 04.39 வரை

**துலாம்:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிலும் கவனமுடன் செயற்படுங்கள்.

**விருச்சிகம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப் பார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 9 | 4 | | 2 | 6 | |
| | 1 | | 5 | | 3 | | | |
| | 9 | | 7 | | 2 | 4 | | |
| 6 | 5 | 4 | | | | | 8 | |
| | | 9 | 6 | | 5 | 3 | | |
| | 7 | | | | | 6 | 9 | 5 |
| | | 5 | 2 | | 6 | | 1 | |
| | | | 8 | | 9 | | 3 | |
| | 6 | 3 | | 5 | 4 | 8 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 4 | 5 | 1 | 2 | 8 | 9 |
| 8 | 1 | 9 | 2 | 6 | 7 | 3 | 4 | 5 |
| 2 | 4 | 5 | 9 | 3 | 8 | 1 | 7 | 6 |
| 4 | 9 | 1 | 8 | 7 | 6 | 5 | 3 | 2 |
| 5 | 8 | 6 | 3 | 1 | 2 | 7 | 9 | 4 |
| 3 | 2 | 7 | 5 | 9 | 4 | 8 | 6 | 1 |
| 9 | 5 | 4 | 1 | 8 | 3 | 6 | 2 | 1 |
| 1 | 6 | 8 | 7 | 2 | 9 | 4 | 5 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 4 | 5 | 9 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையினும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# பெண்களின் அபிவிருத்திக்கு தடையாகும் வறுமை

சு.சாராங்கி

ஆண்டுதோறும் பெண்களின் முன்னேற்றம் பெண் உரிமையாளர்களின் கவனிப்பை பெற்றிருப்பது போலவே பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் அதிகரிப்பும் இலங்கையில் அதிகளவு கவனிப்பைப் பெற்றுள்ளது .

பெண்களுக்குச் சிறந்த இடம் வழங்குவதை விட பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளே நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன .

பொருளாதார நோக்கத்தை மட்டுமே இலாபமீட்டலாகக் கொண்ட இலங்கை அரசு பெண்களின் நீதி ,பாதுகாப்பு ,சுகாதாரம் ,அரசியல் உரிமை போன்றவற்றை தமது நீண்ட விவாதங்களுக்கோ ,உரையாடல்களுக்கோ எடுத்துக்கொள்வதில்லை. அந்நியச்செலாவாணியின் அதிகரிப்பை துரிதப்படுத்த வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பைப் பெற்றுச் செல்லும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கு போதுமான எந்த நடவடிக்கைகளையும் இதுவரை சட்டரீதியாக நடைமுறைப்படுத்த முன்வராததோடு ஆங்காங்கு வெளிவரும் சம்பவங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க எத்தனிப்பது பெண்களின் நலனுக்கு ஆபத்தானது மட்டுமல்லாது ஒருசில வேளைகளில் அவ்வாறான நடவடிக்கைகள் பலனற்றும் போய்விடுகின்றன.

அதேபோன்று இலங்கையின் தோட்டத் துறைகளில் நீண்ட பல ஆண்டுகளாக வேலைசெய்யும் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான சம்பளமோ ,அந்தஸ்தோ கொடுக்கப்படுவதில்லை அந்தப் பெண்கள் ஏனைய இலங்கைப் பெ்ண்களுடன் ஒப்பிடும் போது மிக மிக குறைந்த வாழ்க்கைப் பொருளாதாரத்தை பெறுபவர்களாகவே இன்றுவரை இருக்கின்றனர். இந்த நிலைமை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் மிக மோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கு தொடர்ந்தும் வலுச்சேர்க்கின்றது.

மேலும் இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தின் மிகப் பெரும் துறையாக வளர்ந்துவரும் ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தொழில் பாதுகாப்பு குறித்த எந்த வகையான சட்டபூர்வ உரிமைகளும் வழங்கப்படவில்லை, அதற்கான சட்ட ஏற்பாடுகளோ அரசியல் அமைப்பு யோசனைகளோ இதுவரை முன்வைக்கப்படவில்லை. இவ்வாறான நிலைமைகளால் தொழில்புரியும் இடத்தில் சம்பளப் பிரச்சினைகள் எழும்போது சரியான நீதி கிடைக்காமல் போவதோடு இளைஞர்களிடத்தில் விரக்திநிலை உருவாகி மேலும் சமூகத்தில் சீரழிவைத் தோற்றுவிக்கும். நாட்டில் நடைபெறும் இளவயதுத் திருமணங்கள் குடும்பத் தகராறுகளுக்கு இட்டுச் செல்வதோடு நாளடைவில் விவாகரத்துக்கும் வழிகோலுகின்றன. இதனால் இளம் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் .

இதற்கிடையில் இந்த மூன்று துறைகளில் உள்ள பெண்களைத் தவிர கிராமப்புறங்களில் சாதாரண குடும்பங்களில் வாழும் பெண்கள் தினமும் குடும்ப வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் மிக மிக குறைந்த வருமானத்தில் தினமும் கூலி வேலைக்குச் செல்லும் ஆண், பெண்களையும் குழந்தைகளையும் தாராளமாக அடிக்க லாம் எனவும் அதைத் தடுக்கின்ற சட்டம் யார் கையிலும் இல்லை எனவும் தன்னுடைய உழைப்பில் வாழ்வதால் தனது அனைத்து அதிகாரங்களையும் வன்முறைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும் எனவும் விரும்புகிறான். இவ்வாறு அவஸ்தைப்படும் சாதாரண பெண்களின் அபிவிருத்தியை கருத்தில் கொண்ட சுய பொருளாதார வேலைத்திட்டங்களை அரசு கவனத்தில் கொண்டதாக இல்லை. தேர்தல் காலங்களில் மட்டுமே இந்த குடும்பங்களின் வாக்குகள் அரசுக்குத் தேவையாக உள்ளது.

மேலும் நோக்கும்போது பொருளாதார சுமையை ஏற்றுள்ள நகர்ப்புறப் பெண்கள் அதிகார அரசின் கட்டற்ற விலைவாசி அதிகரிப்பால் மிகப்பெரிய வாழ்க்கை போராட்டத்தை எதிர்கொள்வதோடு கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். இதனால் குழந்தைகளின் கல்வி மற்றும் பாதுகப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. ஊடகங்களில் நாளாந்தம் குழந்தைகள் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் செய்திகள் அதிகரித்தவண்ணமுள்ளது.

பெரும்பாலும் ஆண் தலைமைத்துவ குடும்ப பாரம்பரியத்தைக் கொண்ட இலகையில் குடும்பத்தைப் பராமரிக்கும் பொருளாதாரப் பொறுப்பு ஆண்களுக்கு உரியது. எனினும், அபிவிருத்தி நிபுணர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பெண்கள் மீதான பாராபட்சம் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் தடையாக உள்ளதை சுட்டிக்காட்டுகின்றமை விவாதத்திற்குரியது.

கீழ்நிலையில் உள்ள நாடுகள் பெண்கள் மீது விதிக்கும் கலாசாரக் கட்டுப்பாடுகள் நீண்ட காலத்தில் அந்தநாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைப் பாதிப்பதாகக் கருதப்படுகின்றது. பெண்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடுவதற்கான காரணங்களில் ஒன்றாக கலாசார கட்டமைப்பு காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான இறுக்கமான கலாசாரக் கட்டமைப்புள்ள எந்தவொரு நா்டும் பெரிய பொருளாதார முன்னேற்றத்தை அடையவில்லை என்பது விவாதத்திற்குரியது.

பெண்கள் சமூகக் கட்டுமானத்துக்கு ஆற்ற வேண்டிய பணி குடும்ப வாழ்விலிருந்தே தொடங்குகின்றது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் அதை நாம் புறக்கணிக்க முடியாது. ஆண்-பெண் இரு சாராரும் சமூகத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் அதை யாரும் மறுக்க முடியாது .ஆயினும், பெண்களை அறிவூட்டுதல், சமூகப் பொருளாதார அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்தும் எனும் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை, பெண்கள் உலகில் ஒடுக்கப் படுகிறார்கள் என்பதற்கு கலாசார, பண்பாட்டு மாறுபாடுகளை மட்டும் நாம் குற்றம் சுமத்துவது பொருத்தமற்றது.

பல 100 ஆண்டுகளுக்கு முன்பாக பல நாடுகள் பெண்களைப் பாரபட்சமாகவே நடத்தி வந்தது. ஆனால், இன்றும் பெண்களுக்கு எதிரான கலாசார ஏற்றத்தாழ்வுகள் இந்த நாடுகளில் காண்பிக்கப்படுகின்றன. சில நாடுகளில் ஏற்றத்தாழ்வுகள்மிகவும்குறைவாகவே உள்ளன. ஆனால், பெண்கள் போதியளவு அறிவூட்டப் பட்டுள்ளதோடு சமூக விழிப்பையும் பெற்றுள்ளனர்.

இவை அனைத்தையும் விட இலங்கையில் காலனித்துவத்தின் விளைபொருளான கல்வி, சொத்தின்மை, சமூகஅறிவீனம், சமூக விழிப்பின்மை போன்ற காரணிகளும் பெண்களின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது, அத்தோடு நீண்டகால போரின் காரணமான வறுமை பெண்களின் பின்னடைவுக்கான பொறுப்பு என்பதையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெண்களின் அபிவிருத்தியை வெறும் வாழ்தலுக்கான உரிமை மட்டுமே என்ற கண்ணோட்டத்தில் நோக்காது அதற்கான சமூகப் பின்னணி யுடன்தான் நாம் பார்க்க வேண்டும்.

## பிரச்சினையை எளிதாகக் கையாள வழிமுறைகள்

**பொதுவாக பெண்களுக்கு நிறைய விடயங்கள் பிரச்சினையாகவோ, சிக்கலாகவோ இருக்கலாம். ஆனால் அவற்றை சில முறைகளைக் கையாண்டால் நிச்சயம் நீங்கள்தான் வெற்றியாளராக இருப்பீர்கள்.**

### சாதனையாளர்களை பின்பற்றுவோம்

சாதனையாளர்கள் எல்லாருமே சாதனையாளர்களாகவே பிறப்பதில்லை. அவர்களும் எத்தனையோ தோல்விகளையும், அவமானங்களையும் சந்தித்துத்தான் சாதனையாளர்களாக உருமாறுகிறார்கள். எனவே, நீங்கள் அடையும் ஒவ்வொரு தோல்விகளையும், சறுக்கல்களையும் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### தவறை ஒப்புக் கொள்வோம்..

நண்பர்களுக்குள்ளோ, உறவினர்களுக்குள்ளோ, தம்பதிகளுக்குள்ளோ எந்த விதமான சண்டையோ கருத்து வேறுபாடோ ஏற்பட்டால், அது பெரிய பிளவை ஏற்படுத்த விடாமல் தடுக்க வேண்டியது அவசியம். பல நேரங்களில் நாம் அதனைத் தடுக்காமல் விட்டுவிடுகிறோம். தவறு என் பக்கம் இருந்தால் மன்னித்துவிடு என்று பிரச்சினையை அதோடு நிறுத்திவிடுங்கள்.

மன்னிப்புக் கேட்பது மட்டும் நீங்களாக இருக்க மாட்டீர்கள். உறவிலும், அன்பிலும் வெற்றி பெறுவதும் நீங்களாகவே இருப்பீர்கள்.

### மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்போம்..

பொதுவாக ஒருவரை நாம் புரிந்து கொள்ளாமல் போவதற்கு, அவர்கள் மீதான வெறுப்புத் தான் காரணமாக இருக்கும், அவர்களை வெறுக்கக் காரணமே அவர்களை நாம் புரிந்து கொள்ளாமல் போவதுதான். எனவே, நம்மைச் சுற்றியுள்ளவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம்.

அவர்கள் நிலையில் இருந்து ஒரு பிரச்சினையை ஆராய்ந்து பார்க்க முயற்சிக்க வேண்டும். இதுவே ஒரு பிரச்சினையை எளிதாகக் கையாள சரியான வழியாக இருக்கும்.

## திருவடிநிலை கடற்கரை வீதியை திருத்துக

யாழ்ப்பாணம், நவ.18

சுழிபுரம் திருவடிநிலை கடற்கரை வீதி திருத்தப்படாத காரணத்தினால் அந்த வீதியை பயன்படுத்தும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

"திருவடிநிலை கடற்கரை வீதியை மயானத்துக்குச் செல்வதற்காக பிரதேச மக்களாகிய நாம் பயன்படுத்தி வந்தோம். நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் இந்த வீதி உள்ளது. இதனால் மயானத்துக்கு இறந்தோரின் உடல்களைத் தகனம் செய்யக் கொண்டு செல்வது கடினமாக உள்ளது. 30 வருடமாக திருத்தப்படாத இந்த வீதியை திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கோரியுள்ளோம்" -என்றனர். (ந-28-10)

## விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் "ஆசிரிய கல்வியாளர் ஒரு கல்வித் தொழில்நுட்பவியலாளராக" குறுங்கால கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் யாழ்.பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-14)

♦♦♦

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சுற்றுலாத் துறையும் விடுதி முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (ந-14)

♦♦♦

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மானுடவியல் சமூக விஞ்ஞான பீடத்தினால் சமூக ஒருமைப்பாட்டு சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கை நெறியினைப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். தகுதியுடையவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ந-14)

## 3 ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்

செல்வி உத்தரகுமாரி துரைராசசிங்கம்

(முன்னாள் ஆசிரியை - நல்லூர் ஆனந்தா வித்தியாலயம்)



அன்னை மடியில்
10.03.1966



கயவனின் அழிப்பில்
18.11.2010

மூன்றாண்டுகள் முடிந்து விட்டபோதும்
உம் நினைவுகளை மறக்கமுடியவில்லையே
உத்தரகுமாரியின் வாழ்வு உத்தரகாண்டமாக
முடிவுற்ற போதும்
நோயுற்று மரணமடைந்திருந்தால்
எமது உள்ளம் இவ்வளவு வேதனை அடைந்திருக்காது.
கயவனால் அழிக்கப்பட்டமையால்
உமது ஆறாத துயரத்தினால்
உம்மை நினைந்து நினைவு கூருகின்றோம்

குடும்பத்தினர்.

கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு.

(40106) (45.6.3)

## நெஞ்சைவிட்டகலா நினைவுகளில் 12 ஆண்டுகள்

உயிர்ப்பு 15.01.1944 — சங்கமம் 30.11.2001

அமரர்

**கந்தையா பன்னிருகரம்**

(முன்னாள் உரிமையாளர்
நியூகௌரி மிதிவண்டி வாணிபம், நெல்லியடி)



திதி : 18.11.2013

ஊர்போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்.

"சாந்தி பவனம்"
கொற்றாவத்தை, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(40213) (7.6.3)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**சோகேஸ்வரன் கஜேந்தன் [கஜன்]**

தோற்றம்: 19.02.1989 — மறைவு: 05.10.2013

கடந்த 05.10.2013 சனிக்கிழமை இறைபதம் அடைந்த
எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (18.11.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்)

கெருடாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(39466) (45.6.3)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி

**தங்கநாயகம் நாகரத்தினம்**



தோற்றம்
28.11.1925

மறைவு
19.10.2013


கடந்த 19.10.2013 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி
தங்கநாயகம் நாகரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (18.11.2013) திங்கட்கிழமை
நண்பகல் 12 மணிய ளவில்அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம். மற்றும் எமது அன்புத் தாயாரின்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம்
தெரிவித்தோருக்கும் பல வழிகளில்
உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
077 731 4820,
077 731 0059

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (அருள் முருகன் காட்வெயார்)

(40132) (4.6.3)

## மாணவர் கௌரவிப்பு




யாழ்ப்பாணம்,நவ.18
அனலைதீவு வடதூர் அ.த.க.பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் சி. இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வு நிலை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஷ்ணன், தீவக கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.சோமசேகரம், ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தனி நாயகம், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் என். இராதா கிருஷ் ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (வ-9)


## காக்கைதீவில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் ஆபத்து

### சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவர ஏற்பாடு

வலி.தென்மேற்கு,நவ.18
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் காக்கை தீவு பகுதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளாலும் மலக் கழிவுகளாலும் மக்களும் கால்நடைகளும் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது குறித்து வடமாகாண சபையின் சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளனர். பிரதேச சபை உறுப்பினர்கள், இந்த அவலநிலைக்கு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்காக அமைச்சரை அழைத்து வந்து நிலைமையை நேரில் காண்பிப்பதற்கான நடவடிக்கையையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர். வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காக்கைதீவு பகுதியிலுள்ள காணியில் யாழ். மாநகர சபையால் தினமும் கொட்டப்படும்திண்மக்கழிவுகளாலும் மலக் கழிவுகளாலும் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடு நிலவுகிறது.
மேய்ச்சல் தரைக ளும் விவசாய நிலங்களும் மாசடைவதால் கால்நடை களுக்கும் விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள் ளது.
திண்மக் கழிவுகளிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்தாலும் இலையான்களின் உற்பத்தியாலும் மக்கள் தொற்று நோய் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர்.
இந்த அவலநிலை குறித் துப் பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டியுள்ள பொது மக்களும் பொது அமைப்புக்களும் சுகாதார சீர்கேட்டிலிருந்து மக்களைக் காப்பாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளன.
அதையடுத்து இது தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர முன்வந்துள்ள உறுப்பினர்கள், அமைச்சரை அழைத்து வந்து கள நிலையை நேரில் காண்பிப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர். (வ-115)


## வசமாக மாட்டினர் ஆறு வர்த்தகர்கள்

தென்மராட்சி, நவ.18
யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையினர் தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் மேற் கொண்ட திடீர் பரிசோதனைகளின்போது 6 வர்த்தகர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்.
விலைப்பட்டியல் வைக்கப்படாமை, அதிக விலைக்குப் பொருள்கள் விற்றமை, காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமைக்காக குறித்த 6 வர்த்தகர்களுக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை




வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்குகளை விசாரணைக்கு எடுத்த நீதிவான் ஆறு வர்த்தகர்களையும் அடுத்த மாதம் 13 ஆம் திகதி நீதிமன்றுக்கு வருகை தருமாறு அழைப்பாணை அனுப்பி வைக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார். (வ-9)

## மீண்டும் இயங்கும் வீமன்காமம் சந்தை



வலி.வடக்கு, நவ.18
கடந்த இருபது வருடங்களாக இயங் காது இருந்த தெல்லிப்பழை வீமன்காமம் மீன் சந்தை நேற்று முன் தினம் சனிக்கிழமை முதல் மீண்டும் இயங்கத் தொடங்கி யுள்ளது.
வலி.வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த சந்தைப் பகுதியில் ஏற்கனவே மரக்கறி சந்தை இயங்கி வந்த நிலையில் தற்போது மீன்சந்தையும் புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் இந்தப் பகுதியில் உள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது இலகுவாகியுள்ளது. மிக விரைவில் மக்களின் நன்மை கருதி குறித்த சந்தையில் ஆட்டிறைச்சிக் கடையும் ஆரம்பிக் கப்படவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-86)

## மருந்தகத்துக்கு சைக்கிள் தரிப்பிடம்



கைதடி. நவ.18
கைதடி மத்திய மருந்தகத்துக்கு வருகை தரும் நோயாளர்களின் மற்றும் மருந்தக உத்தியோகத்தர்களினதும் நலன்கருதி கைதடி தெற்கைச் சேர்ந்த அமரர்களான காசியப்பா நாகம்மா ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் குணலிங்கமும் சகோதரர்களும் இணைந்து சைக்கிள் தரிப்பிடம் ஒன்றை அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளனர்.
இதன் மூலம் தாம் பெரும் பயனை அடைந்து வருவதாக நோயாளர்களாலும், ஊழியர்களாலும் தெரிவிக்கப்படுகின்றன. (வ-288)

## முள்ளியவளையில் சிக்கின முதிரை மரங்கள்

முள்ளியவளை, நவ. 18
முள்ளியவளையில் பெருமளவு முதிரை மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் இந்த முதிரை மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அந்த இடத்தில் காணப்பட்ட 5 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
இவர்களில் நால்வர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் ஆவர். இவர்களுடன் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (க-433)



## துப்புரவு செய்யப்படாத மேய்ச்சல் தரவைகள்

### போதிய நிதி கிடைக்காததால்

துணுக்காய்,நவ.18
போதிய நிதி கிடைக்காததால் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணியைத் துப்புரவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரவைக்கென 1000 ஏக் கர் நிலம் ஒதுக்கப்பட்ட போதிலும் துப்புரவு செய்ய நிதி கிடைக்காததால் அதனைத் துப்புரவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
அனிஞ்சியன் குளத்தை அண்டிய பகுதியில் 1000 ஏக்கர் நிலம் துப்புரவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது.
இந்த மேய்ச்சல் தரவை துப்புரவு செய்யப்படாமையால் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கால்நடைகளைப் பராமரிப்பதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதேவேளை அம்பலப்பெருமாள் குளப் பகுதியில் மேய்ச்சல் தரவைக்கென காணி ஒதுக்கப்பட்ட போதிலும் அங்கு புல்லை வளர்க்கும் முயற்சிகள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)



## முள்ளியவளைப் பகுதியில் கட்டாக்காலிகளால் இடையூறு

முள்ளியவளை,நவ.18
முள்ளியவளைப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகளால் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.
முள்ளியவளையின் ஆலடிச் சந்தி தொடக்கம் மாஞ்சோலை மருத்துவமனை வரை மாலையானதும் வீதியெங்கும் கட்டாக்காலி மாடுகள் நிறைந்து காணப்படுகின்றன. இவை நடு வீதியில் கூட்டமாகப் படுத்திருப்பதால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களுக்கு ஆளாகி வருவதுடன் உயிரா பத்தையும் எதிர்கொண்டுள்ளனர். காலையில் வீதி முழுவதும் மாட்டு சாணம் காணப்படுவதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் பாதிக் கப்படுவதைக் காண முடிகின்றது.
கடந்த 15 ஆம் திகதி திருமண பந்தத்தில் இணையவிருந்த முள்ளியவளை தபாலதிபர் சி.அருணன் (வயது-34) முதல் நாள் மாலை வேளையில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அங்கு நின்ற மாடு ஒன்று அவரை முட்டித் தள்ளியது. இதனால் நிலை குலைந்து கீழே வீழ்ந்த அவர் இடுப்புப் பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
எனவே இனியாவது இந்த மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-433)



# கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாடநெறியின் விரிவுரையாளரான செல்வி இரத்தினபூபதி முருகுப்பிள்ளை அவர்களின் அன்புத்தாய்

**திருமதி மீனாட்சி முருகுப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளர், விரிவுரையாளர்கள்,
தேசிய கல்வி நிறுவகம், யாழ்ப்பாணம்.
(40224)(3.6.4)

# கண்ணீர் அஞ்சலி

"பால் மணம் மாறாத பிஞ்சு நீ
பள்ளிப் பருவமதில் அடியெடுத்தாய் ஏழாண்டு
ஏழே நாளில் உன் ஏட்டை காலனின் கை கொண்டு சென்றதுவோ"

16.11.2013 அன்று இறைபதமடைந்த எமது பாடசாலையின் தரம்-7 மாணவி

**செல்வி ஜோர்ஜ் சத்தியருபன் சகானா**

அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.
(40226)(3.6.4)

## இலட்சார்ச்சனை

தென்மராட்சி, நவ.18

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதமும் இலட்சார்ச்சனையும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும்.

இறுதி நாளான டிசெம்பர் எட்டாம் திகதி கஜமுகாசூரன் வதம் உற்சவமும் இடம் பெறும். சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் இலட்சார்ச்சனைஇடம் பெறும்.

(ந-9)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
18.01.1923

மறைவு
19.10.2013



## அமரர் சின்னத்தம்பி குலத்துங்கம்

கடந்த 19.10.2013 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (18.11.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு சகல வழிகளிலும் உதவி புரிந்து ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

கே.கே.எஸ். வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(40220)(10.6.3)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சண்முகம் பூரணானந்தசிவம்

(உரிமையாளர் - ராஜமோகனா லொறி )



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் பூரணானந்தசிவம் 16.11.2013 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்- முத்துப்பிளளை தம்பதியினரின் புதல்வரும், தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும், ராஜரூபன் (Norway), ராஜ மோகனா (France), காலஞ்சென்ற ராஜ மோகன் மற்றும், ஐங்கரன் (London), Dr.ராஜவதனா (Colombo), ராஜலோசனா (ஆசிரியர், யா/நீர்வேலிC.C.T.M ), ராஜவதனன் (Finland), கார்த்திகா(Germany) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைவாணி, மயிலானந்தம், கஸ்தூரி, தயசீலன் (ஆசிரியர், யா/ஆவரங்கால் மகாஜனா), ஜெயராம் ஆகியோரின் மாமனும், ஏமி, எம்மா, எமிலி, ஜனனன், அருனோத், அரியணி, ஜனதூரி, பஞ்சசீகா, அபினா, அனுகா, ஆரூரன், அபினேஷ் ஆகியோரின் பேரனும், காலஞ் சென்ற குணவதி மற்றும் சிவபாக்கியம், பூபதியம்மா ஆகியோரின் சகோதரனும், தேவராசா, தற்பரானந்தம், கந்தசாமி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (19.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
(40227)(3.6.4)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

செல்வி

## ஜோஜ் சத்தியருபன் சகானா

(மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை 7ஆம் ஆண்டு மாணவி)



கூழாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும கொண்ட ஜோஜ சத்தியரூபன் சகாணா 16.11.2013 காலமானார்.

அன்னார் ஜோஜ் சத்தியரூபன்- சுதாஜினி தம்பதியரின் அன்பு மகளும், யூட் சகானின் அன்புச் சகோதரியும், சின்னராசா- பூமணி, காலஞ்சென்றவர்களான அந்தோனி முத்து- அன்னம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுரேஸ்-துசாலி ஆகியோரின் மருமகளும், சந்திரா, காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் வேதநாயகம், ராசு, செல்வன் (இத்தாலி), ஜெயம் (கனடா) ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
கூழாவடி,
ஆனைக்கோட்டை.
T.P : 077 284 0662
(40217)(7.6.3)

## திருமதி பத்மாவதி சுந்தரலிங்கம்



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெமட்டக்கொடையை வதிவிடமாகவும், தற்போது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி சுந்தரலிங்கம் அவர்கள் 15-11-2013 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆங்கில ஆசிரியரும், கேம்பிறிஜ் சீனியர் பட்டம் பெற்றவர்)- பொன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் (இளைப்பாறிய பதிவாளர்- சிங்கப்பூர்)-செல்லம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் சிவகுருநாதன் (முன்னாள் சிரேஸ்ட விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்- கொழும்பு வெஸ்லி கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சுகுமாரலிங்கம் (சுரேஸ்/சுகு- ஆஸ்திரேலியா Perth), சத்தியலிங்கம் (ரவி/சத்தி- ஆஸ்திரேலியா Newcastle), காலஞ்சென்ற சுந்தரவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி (நோர்வே), மகாதேவன்(முன்னாள் மருந்தக விரிவுரையாளர் - வைத்தியக்கல்லூரி), சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசோதா (ஆஸ்திரேலியா), சிவாயினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மாமியும், காலஞ்சென்ற இராஜதுரை (முன்னாள் இரத்மலானை நெப்ரியூன் மருந்தக உரிமையாளர்), காந்திமதி (UK - லண்டன்), காலஞ்சென்ற நித்தியநாயகம் (பட்டயக் கணக்காளர்), கலாநிதி ஞானலிங்கம் (UK - Manchester), ஜானகி (ஆஸ்திரேலியா- Melbourne), சாந்தி (யாழ்ப்பாணம்), வைத்திய கலாநிதி சிறிரங்கலிங்கம்(UK - லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், பொன்னையா மனோகரன் அவர்களின் வளர்ப்புத் தாயாரும், அருண்ராஜ், மயூரா, மிதுஷன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2013) திங்கட்கிழமை பிற்பகல் 5.00 - 7.00 மணிவரை Chipper Funerals 103, Norma Road, Myaree WA இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (19.11.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 - 1.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1.30 மணிக்கு Fremantle East Chepel, WA Australia இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சுகுமாரலிங்கம் ஆஸ்திரேலியா
தொலைபேசி : +618 9354 2705
செல்லிடப்பேசி : +614 2777 3757
மின்னஞ்சல் : sukumarjaso27@gmail.com

சத்தியலிங்கம் ஆஸ்திரேலியா
செல்லிடப்பேசி : +614 3166 3495
மின்னஞ்சல் : sathi.suntha@gmail.com
(40219)(7.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.

## ஆங்கில தின விழா

அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆங் கில தினவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள ஆங் கிலப் பாடத்துறை உத விக் கல்விப் பணிப்பாளர் என்.சோமஸ்கந்தராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆங்கில ஆசிரியர் ஆலோசகர் கே.சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (ந-11)

## பரிசளிப்பு விழா

உடுவில் முருகமூர்த்தி வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வர். (ந-14)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,நவ.18
20 வருடங்களின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்ட தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் ஸ்ரீமுருகன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதன் ஆரம்பக் கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாகபூசையும், காலை 7 மணி முதல் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நிகழ்வும் இடம்பெறும். (ந-36-14)

## தூக்கில் தொங்கிய குடும்பஸ்தர் சடலம்

தென்மராட்சி, நவ.18
படுக்கைக்குச் சென்ற குடும்பஸ்தர் வீட்டு விறாந்தையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.
இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மந்துவில் கிழக்குப் பகுதியில் இடம் பெற்றது. தொழில் வாய்ப்புக்காக சவூதி அரேபியா சென்றிருந்த குறித்த நபர் அங்கு காலநிலை ஒத்துவராததால் கடந்த மாதம் மீண்டும் ஊர் திரும்பி இருந்தார்.
வெளிநாடு செல்வதற்காக கடன் பெற்றிருந்த அவர் மீளச் செலுத்த முடியாத நிலையில் மன விரக்தியுடன் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. 4 பிள்ளைகளின் தந்தையான இந்த நபரின் சாவு தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டதையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-9-14)

## தடம் புரண்டது ஓட்டோ இருவர் காயம்

தென்மராட்சி,நவ.18
ஓட்டோ தடம்புரண்டு மூன்று குத்துக்கரணம் அடித்ததில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை கொடிகாமம் பகுதியில் இடம் பெற்றது. வீதியில் வேகமாக வந்த வாகனத்தின் கதவுப் பகுதி அந்த வழியே வந்த ஓட்டோவில் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் சிக்கியுள்ளது. இதனால் சிறிது தூரம் இழுபட்டு வந்த ஓட்டோ வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதில் தடம் புரண்டது.
ஓட்டோவில் பயணித்த விடத்தற்பளையைச் சேர்ந்த இராமலிங்கம் ரவிச்சந்திரன் (வயது-41) கர வெட்டி கோவிற் சந்தையைச் சேர்ந்த தர்மலிங்கம் விஜயகுமார் (வயது-48) ஆகியோர் காயங்களுக்கு இலக்கானார்கள்.
இவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஓட்டோ சேதங்களுக்கு உள்ளானது. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-9)

## நினைவுப் பேருரை

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியத்தின் 19 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் கந்தையா உயர்த்தியாயர் மண்டபத்தில் அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நினைவுப் பேருரையை யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் பொ.ஞான தேசிகள் "அன்பு தன்னில் தழைத் திடும் வையம்" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். நினைவுரையை கல்லூரியின் பிரதி முதல்வர் திருமதி சா.நாகராசா நிகழ்த்துவார். (ந-36)

## மகளிர் தின நிகழ்வு

சேர்.பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் மகளிர் தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியை ஸ்ரீ மதி சத்தியபாமா தனபால சிங்கம் "மகளிர் மகிமை" எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து "குடும்ப சமூக மேம் பாட்டில் பெண்ணின் முதலீடு" எனும் நாடகமும் இடம்பெறும். (ந-14)

## சட்டமாணிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.18
இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி எல்.எல்.பி. அனுமதிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இந்த முறையும் நாடெங்கும் இடம் பெறவுள்ளது.
கடந்த காலங்களில் கணிசமான மாணவர்களை தமிழ் மொழி மூலம் சித்தியடையச் செய்த வளவாளர்கள் இம்முறையும் நடத்தவுள்ளனர்.
யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கண்டி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்குகளில் முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## நல்லொழுக்க தின போட்டி முடிவுகள்

வடமராட்சி,நவ.18
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சர் வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள் இடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
போட்டிகளின் விவரமும், வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களும் வருமாறு:

கீழ்ப் பிரிவு - பேச்சு
மி.மதுசிகா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ம.கோபிகா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, ஜெ.நிலாந்தி-நெல்லியடி ம.க.வி.

கீழ்ப் பிரிவு - கட்டுரை
வி.அருள்தாஸ்-கரணவாய் ம.வி., வ.தேனுகா-நெல்லியடி ம.ம.வி., இ.மகிழினி-கரவெட்டி வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி.

கீழ்ப் பிரிவு - கவிதை
வி.ரேணுகா-கட்டை வேலியார்க்கரு விநாயகர் வித்தி., ந.அபிசா-கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, கி.ஆதனா -நெல்லியடி மத்திய ம.வி.

மத்திய பிரிவு - பேச்சு
வ.சங்கீர்த்தனா-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, இ.ஜெயப்பிரியா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சி.லக்சனா-நெல்லியடி ம.ம.வி.

மத்திய பிரிவு - கட்டுரை
செ.சங்கவி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கி.யுவேகா-நெல்லியடி ம.ம.வி., அ.ரொன்யா-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு - கவிதை
சே.நிசாந்தினி-வதிரி திரு இருதயக் கல்லூரி, மோ.சங்கீர்த்தனா-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,ந.காயத்திரி- கரணவாய் ம.வி.

மேற்பிரிவு - பேச்சு
கு.வைதேகி-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ச.சர்மினா-நெல்லியடி ம.ம.வி.

மேற்பிரிவு - கட்டுரை
த.மகிழினி-நெல்லியடி ம.ம.வி., ம.அருள்மொழி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இ.ஆர்த்தி-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

மேற்பிரிவு - கவிதை
ர.பிரிந்தா-கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, க.சங்குலஷ்சுமி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சி.சுகன்யா-நெல்லியடி மத்திய மகாவித்தி. (ந-8)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### அச்சுறுத்தும் முடிச்சுமாறிகள்

எம்மவர்க்கு தெய்வம் நின்றறுக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை இருந்ததனால் பஞ்ச பாதகங்களுக்குப் பயந்தவர்களாக வாழப் பழகிக் கொண்டார்கள். சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் சபை, சந்தி, சம்பந்தங்களில் ஓரங்கட்டப்பட்டனர். மனச்சாட்சிக்குப் பயந்தவர்களாக வாழ்ந்தவர்கள் மிகுந்திருந்த இந்த மண் இன்று பல்வேறு சமூக விரோதச் செயல்களின் பண்ணையாகிவிட்டது. இதனால்தான் போலும் கோள்களின் நிலை கூடத் திரிந்து காணப்படுகின்றது.
பஸ்களிலும், மினி பஸ்களிலும் பிக்பொக்கற்- முடிச்சுமாறிகளின் தொழில் தான் தற்போது ஏறுமுகத்திலுள்ளது. பறிகொடுத்தவரது ஏக்கமும் அதிர்ச்சியும் வேதனையும் உடல், உளத் தாக்கங்களைப் பற்றியும் முடிச்சுமாறிகளுக்கு அக்கறையில்லை. ஒருவரோ அல்லது கூட்டாக இருவரோ இடித்து, உராசி தமது தொழில் நுட்பத்தின் மூலம் உருவிக் கொண்டு நிலைமைக்கேற்ப இறங்கி விடுவதே அவர்களது தொழில் இரகசியம்.
முடிச்சுமாறி ஒருவன் அண்மையில் மினிபஸ் நடத்துநரிடம் மாட்டிக் கொண்டான். அவன் பயணி களால் நன்றாகக் கவனிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டான். பொதுவாக தமது பஸ்களின் வழித்தடத்தில் பயணிப் போரது முகங்கள் நடத்துநர்களுக்கு ஓரளவுக்கு பரிச்சயமாகவே இருக்கும். பயணிகள் நலனுக்காகவும், சமூக நலனுக்காகவும் நடத்துநர்கள் கண்காணிப்புடன் இருப்பார்களாயின் அது வரவேற்கத் தக்கதே. அவர்கள் கண்காணிப்பாக இருந்தால், பஸ்களில் இவ்வாறான சம்பவங்களை ஒழித்துக்கட்ட முடியும். செய்வார்களா...?

## யாழ்.இந்து மாணவன் சாதனை



இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தால் இந்த வருடம் நடைபெற்ற மென்பொருள் விருத்திப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம்ஞானகீதன் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
வருடம் தோறும் இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும், பட்டக் கல்வி மேற்கொள்வோருக்கு ஒரு பிரிவாகவும் தேசிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போட்டியில் வடமாகாணம் சார்பாகப் பங்குபற்றிய யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ப.ஞானகீதன் மிகச் சிறப்பாக செயற்பட்டு தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.
இவருக்குச் சான்றிதழும், அறுபதாயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.
இந்தப் போட்டியில் முதல் இடத்தை கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனும், மூன்றாம் இடத்தை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவரும் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று வடமாகாண தகவல் தொழில் நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் வெலின் தெரிவித்துள்ளார். (ந-422)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




கிளி/உருத்திரபுரம் ம.வி. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
2013ஆம் ஆண்டு சித்தியடைந்த
செல்வி யோகநாதன் தசனிகா 165 புள்ளிகள்.
செல்வன் தர்மரட்ணம் திவ்வியன் 164 புள்ளிகள். ஆகியோரையும்
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும்
இன்றைய தினம் (18.11.2013)
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/உருத்திரபுரம் ம.வி.
(40228) (7.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013ஆம் ஆண்டு
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
163 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த
செல்வி
கணேசன் சிவகௌரி
அவர்களையும்
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற



அ. பிரியவர்மன் 145, கு. பரத் 132,
பா. துளசிகா 130, சி. மதுசன் 130,
ரொ. லதுர்சன் 119, கி. யதுஷிகா 115,
கி. சங்கவி 104
Congratulations
Best Wishes
ஆகிய மாணவர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(40225)(7.6.3)
அதிபர், ஆசிரியர்கள்.
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

# புலமை பரிசில் பரீட்சைக்கு இனிமேல் ஒரு வினாத்தாள்



ஆராய்கிறது கல்வி அமைச்சு

கொழும்பு. நவ.18

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தற்போது வழங்கப்படும் இரண்டு வினாத்தாள்களுக்குப் பதிலாக அடுத்த ஆண்டிலிருந்து ஒரு வினாத்தாளை மாத்திரம் வழங்க கல்வி அமைச்சின் கவனம் திரும்பியுள்ளது.

வினாப்பத்திரங்கள் இரண்டுக்கும் பதில்களை வழங்குவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் என்ற கால அவகாசம் வழங்கப்பட்டுள் ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஒரு வினாப்பத்திரத்துக்கு பதில்களை வழங்க ஒன்றரை மணித்தியாலங்கள் என்ற கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய வினாப்பத்திரத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி விரைவில் பரிந்துரைகளைப் பெற்றுத் தருமாறு கல்வி ஆணைக் குழுவுக்கு எழுத்து மூல அறிவித்தலை விடுத்துள்ளோம் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு மேலதிகச் சுமையாக ஆகாத விதத்தில் மாணவர்களின் சாதனை மட்டத்தை அளவிடும் பரீட்சையொன்றாக நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ச)

# குணமடைந்த மன நோயாளிக்கு தொழிற்பயிற்சி

கொழும்பு.நவ.18

மனநோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு. குணமடைந்து. பின்னர் வீட்டுக்கு அழைத்துச் செல்லாதவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுமார் 300 இற்கும் அதிகமானோ ருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று அங்கொடை மன நோய் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஜயான் மெண்டீஸ் தெரிவித் தார்.

அதனையடுத்து, குறித்த நபர்களை மீண்டும் வீட்டுக்கு அழைத்து செல்ல முன்வரும் உறவினர்களின் எண்ணிக்கை யில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

### பாட நூல்களில் காணப்படும்

# இலக்கண பிழையை திருத்துவதற்கு குழு

கொழும்பு.நவ.18

பாடசாலைப் பாட நூல்களில் உள்ள இலக்கண மற்றும் எழுத்துப் பிழைகளை திருத்துவதற்காகப் பேராசிரியர் கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் 14 பேராசிரியர்கள் அங்கம் வகிக்கின்றனர் என்று கல்வி வெளியீட்டு ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவித்தாரண தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்தக் குழுவுக்கான பேராசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாடநூல்களில் காணப்படுகின்ற அனைத்து இலக்கண மற்றும் எழுத்துப் பிழைகளையும் கண்டறிந்து அவற்றை திருத்துவதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக என்று இந்தக் குழு தெரிவித்துள்ளது. (ச)

# மீன்பிடிப் படகுகள் கரைக்கு திரும்பின

### எரிபொருளில் கலப்படம் என சந்தேகம்



திருகோணமலை.நவ.18

திருகோணமலை, சீனன் குடா மீன்பிடித் துறைமுகத்தில் இருந்த ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற பல படகுகள் பழுதடைந்த நிலையில் மீண்டும் துறைமுகத்துக்கு திரும்பி உள்ளன. அதனால் படகுகளின் உரிமையாளர்களுக்கு பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட் டுள்ளது.

துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட குளறு படியே இதற்கு காரணம் என்று மீனவர்களும். படகுகளின் உரிமையாளர்களும் தெரிவிக்கின்றனர்.

சீனன்குடா துறைமுக எரிபொருள் விநியோகிக்கும் இடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருளில் கலப்படம் செய்யப்பட்டு இருக்கலாம் என்று தாம் சந்தேகிகப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து கடற் தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 10 ஆம் திகதி எரிபொருள் நிரப்பிக் கொண்டு கடலுக்கு சென்றபோது, இடை நடுவில் படகுகளின் இயந்தி ரங்களில் ஏற்பட்ட குழப் பத்தால் தொடர்ந்து கடலுக் குச் செல்ல முடியாது நாம் திரும்பியுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சில படகுகளின் இயந்திரங் கள் பழுதடைந்துள்ளன. அதற்கு எரிபொருளில் ஏதோவொன்று கலக்கப்பட்டிருப்பதாக திருத்துநர்கள் தெரிவித்தனர் என்று பட குகளின் உரிமையாளர்கள் கூறினர். (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி கதிரவேலு



சில்லாயைப் பிறப்பிடமாகவும், கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வரான திருமதி அன்னலட்சுமி கதிர வேலு - (17.11.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - கண்ணகை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சுப்பர் - சிதம்பரம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சுப்பர் கதிரவேலுவின் அன்புமனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்ககிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

168 ஆடியபாத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(மருந்துவக்கல்லூரி முன்பாக)

தகவல்:
குடும்பத்தினர்
க.யோகராசா (மகன் - லண்டன்)
சி. குகநாதன் (மருமகன்)

## துயர் பகிர்கின்றோம்



உயர்தர கலைவர்த்தக பிரிவிற்கு பொறுப்பான பகுதித்தலைவர் செல்வி இரட்ணபூபதி முருகுப்பிள்ளை அவர்களின் அன்புத் தாய்

திருமதி மீனாட்சி முருகுப்பிள்ளை

அவர்கள் 15.11.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி

(40230)
(10)

## மரண அறிவித்தல்

அருட் சகோதரி

### பெனடிக்ரா பஸ்ரியாம்பிள்ளை .தி.சி

''உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''



திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி பெனடிக்ரா பஸ்ரியாம் பிள்ளை நேற்று (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை-நேசம்மா தம்பதியரின் அன்புமகளும், இராஜேஸ்வரி (மலர்) காலஞ்சென்ற சூசையா (செல்வம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருட்சகோதரி றெபேக்காவின் .தி.சி மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குத் திருப்பலி இன்று (18.11.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் நடைபெற்று. பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருச்சிலுவை கன்னியர் மடம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(40234)
(10)

தகவல்:
திருச்சிலுவை சபை
அருட்சகோதரிகள்.

## இறுதி அஞ்சலி ஒன்று கூடல்

### V.S. கணேசலிங்கம் (சட்டத்தரணி)



கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை நிறுவுநர் அமரர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் பேரனும் அமரர் வேலுப்பிள்ளை சிற்றம்பலம் (ஆசிரியர்) - சிவகாமிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனுமாகிய V.S கணேசலிங்கம் அவர்கள் (15.11.2013) வெள்ளிக் கிழமை அவுஸ்திரேலியா மெல்போர்ண், நகரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2013 புதன்கிழமை 2.30 மணியளவில் மெல்போர்ண் நகரில் நடைபெறும். அன்றையதினம் காலை 9.30 மணிக்கு போற்றொல்லை அரசடி வீதி, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியிலமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலி ஒன்று கூடல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

சி. பாஸ்கரலிங்கம் (சகோதரன்)
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
தொடர்பு : 077 3475061

தகவல்: குடும்பத்தினர்
காங்கேயன் ( +61432323556)
கலைவாணி (+61423039528)
கௌரி (+61434417155)


## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
NPLJ "ISUZU"
கன்ரர் 250 - விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:077 020 0662

(37586)(4.6.3)

## வகுப்புக்கள்

கணினி, ஆங்கிலம் மற்றும் சிங்கள
வகுப்புக்கள் புதிய பிரிவுகள்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
இல.28,பேரின்பநாயகம் வீதி,
சுச்சேரி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 8193/021 567 0350

(40229)(4.6.3)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து
- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel : 021 222 3536

இணை நிறுவனம் : ARRUL GLOBAL EXPRESS 01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

ARRUL'S (Pvt) Ltd
International Courier & Cargo Service

## வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.18

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் உள்ள வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றை உடைத்து அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்களை களவாடி சென்றுள்ளனர் திருடர்கள்.

இந்தத் திருட்டு சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

திருடர்கள் இந்த நிலையத்தின் முன் பக்கக் கதவை உடைத்து அங்கிருந்த மின்சார மோட்டார் மற்றும் பல உபகரணங்களைத் திருடியுள்ளனர்.

இந்தத் திருட்டு தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அண்மையில் இப் பகுதியில் உள்ள இரண்டு இரும்புப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் உடைக்கப் பட்டு பலலட்சம் ரூபாபெறுமதியான பொருள்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## சமுர்த்தி அலுவலகம் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம், நவ.18

கைதடியில் அமைந்துள்ள சமுர்த்தி அலுவலகம் மீது இனந் தெரியாதோர் கல்வீசியதில் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

கைதடி, கமநலநிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள குறித்த கட்டடத்தின் கண்ணாடிகளே சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எமது உறவுகள்

ஆரம்பமான இப்போராட்டம், கந்தசுவாமி கோவில் வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று வீதியோரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் நிறை வடைந்தது.

"இலங்கை அரசே காணாமற்போனோர் தொடர்பில் உனது நிலைப்பாடு என்ன?", "கடத்தப்பட்ட எங்கள் பிள்ளைகள் எங்கே?", "எனக்கு அண்ணாவைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது, எனது அண்ணாவை மீட்டுத் தாருங்கள்", "எனக்கு அப்பாவைப் பார்க்க ஆசையாக உள்ளது, அப்பாவைக் காட்டுங்கள்",

"இலங்கை அரசே நீ கடத்திச்சென்ற கணவன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? பதில் கூறு", "சிறைகளில் அடைத்து வைத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்", "வெளியேறு, வெளியேறு இராணுவமே வெளியேறு", "எங்கள் வீடுகளை எம்மிடம் தா", "இலங்கை அரசே இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய புதிய குடியேற்றங்களை உடன் நிறுத்து", "கொலைகார பூமியில் பொது நலவாய மாநாடா?", "சர்வதேசமே! காணாமற்போன குடும்பங்களின் கண்ணீருக்கு பொதுநலவாய மாநாட்டில் உங்கள் பதில் என்ன?", "சர்வதேச விசாரணை உடன் தேவை" போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோரின் உறவுகள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கதறியழுதவாறு கோஷமிட்டனர்.

இதேவேளை, இந்தத் தீப்பந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், எஸ். ரவிகரன், ம.விந்தன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, இ.இந்திரராஜா, கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), பிரசன்னா இந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், அக் கட்சியின்செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா, வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழுவின் தலைவர் கே.தேவராஜா, பிரஜைகள் குழுவின் காப்பாளர் சண்.மாஸ்டர் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

**அரச தரப்பு கண்டனப் பேரணி**

இந்தத் தீப்பந்தப் போராட்டத்திற்கு எதிராக வவுனியா ஏ - 9 வீதியில் கண்டனப் பேரணி ஒன்றும் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் தர்மபால தலைமையில் இந்தக் கண்டனப் பேரணி நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள் பேரணியாகச் சென்று வவுனியா செயலகத்தில் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று ஏட்டிக்குப் போட்டியாக போராட்டமும், கண்டனப் பேரணியும் நடத்தப்பட்டிருந்த போதிலும் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. (த-402)

### ஐ.நா.

விடுத்தது. பொதுநலவாய மாநாட்டிற்காக வருகை தந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், 2014 மார்ச் மாதத்துக்குள் மனித உரிமை மீறல் குறித்து இலங்கை கவனம் செலுத்தாவிடின் ஐக்கிய நாடுகள் சபையிடம் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக் கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"பிரிட்டிஷ் பிரதமர் கூறுவதை இலங்கை அரசு மறுத்துள்ளது. இப்படியான குற்றச்சாட்டுகளை மறுக்கும் முன் இதுசம்பந்தமாக ஆராய்வதே சிறந்ததாகும். ஆனால், அரசு இவற்றைக் கவனத்தில் எடுக்காது சர்வ தேசத்தை ஏமாற்றுவதையே தனது வழமையாக கொண்டிருக்கிறது. பிரதமர் கமரூன் கூறியதைப் போன்று சுயாதீன விசாரணை வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியாகிய நாமும் பலமுறை அரசிடம் கோரிக்கை விடுத் தும், அரசு இதுகுறித்து சிறிதும் அலட்டிக்கொள்ள வில்லை.

காரணம் இங்கு சர்வாதிகார ஆட்சியே நிலவி வருகிறது.

நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று நம்பகத் தன்மை மிக்க உள்ளக விசாரணையை அரசு செய்திருக்குமானால் எந்த நாடும் சரி அரச தலைவர்களும் சரி இப்படி எச்சரிக்கை விடுத்திருக்க மாட்டார்கள். நம் நாடு விடயத்தில் மூக்கையும் நுழைத் திருக்க மாட்டார்கள்.

அத்தோடு, இந்த பொது நலவாய மாநாடும் அரசுக்கு பெரிய அடியாகவே அமைந்துள்ளது. உறுப்பு நாடுகள் 53 இருந்தும் வெறும் 21 நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்களே இதில் பங்குபற்றினர். அதுவும் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இவர்களின் வருகை இருந்தது.

எது எப்படியிருப்பினும், அரசு இங்கு அரங்கேறிய மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்தே ஆக வேண்டும். இல்லையேல் ஐக்கிய நாடுகள் சபையின் பொறியில் இருந்து ஒரு போதும் தப்பிக்கவே முடியாது - பதில் கூறியே ஆக வேண்டும்" என்றார்.

### இலங்கை

யைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கைக்கு இரண்டு ரோந்து கப்பல்கள் வழங்கப்படும் என்றும் அவர் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்தார்.

ஆஸி. பிரதமரின் இந்த அறிவிப்புக்கு எதிராக மனித உரிமை அமைப் புகளும், ஆஸ்திரேலிய எதிர்க்கட்சிகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

"இது மனித உரிமை களை முடக்கும் செயல்" என மனித உரிமை செயற் பாட்டாளர்கள் விமர்சிக்கின்றனர்.

"இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக பிரதமர் அமைதியாக இருந்தமை மிகப் பெரிய தவறாகும். அதிலும் பார்க்க இரண்டு கடற்படைக் கப்பல்களை வழங்க எடுத்துள்ள முடிவானது பாரதூர மானதா கும்" என்று ஆஸி. கிறீன் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள ஆஸ்திரேலியப் பிரதமர், நேற்றுக் காலை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கடற்படைக்குச் சொந்தமான கப்ப லொன்றில் இடம்பெற்ற இந்தச் சந்திப் பில் கடற்படைத் தளபதி, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஆகியோர் உட்பட்ட பிரமுகர்களும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே ஆஸ்திரேலியப் பிரதமர் ரோந்து கப்பல்கள் வழங்கப்படவுள்ள அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸி. பயணக் கனவில் ஆயிரக் கணக்கானோர் உயிரைப் பணயம் வைத்து வருகின்றனர். இதில் பலர் நடுக்கடலில் பல இன்னல்களை எதிர் கொண்டு உயிரிழக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே நான் இந்த முடிவை மேற்கொண்டுள்ளேன்" என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய ஆஸி. பிரதமர் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அமுலாக் கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நிரந்தர

சவால்களை முறியடித்து, சமப்பாட்டைத் தோற்றுவிக் காத்திரமாகப் பணிபுரிய வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். முழுமையானதும், பயனுள்ளதுமான தொழில் முறைமையோடு நிரந்தரமானதும், சமத்துவமானதுமான உலக வளர்ச்சிக்குப் பணியாற்றவேண்டும் என்றும் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

வளர்முக நாடுகளுக்கான நேர்மையான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு சர்வதேச வர்த்தகம், நிதியம், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை மறுசீரமைக்க வேண்டியது மிக முக்கியமான அம்சமாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சர்வதேச, தேசிய மட்டங்களில் அதிகரித்துவரும் சமத்துவமின்மை, உறுப்பு நாடுகளின் வறுமை ஒழிப்பு குறைப்புக்கும் எதிர்கால சாத்தியமான வளர்ச்சிக்கும் குந்தகமாகவுள்ளது. இயற்கை, மனிதர் உருவாக்கும் பேரிடர்கள் மற்றும் உலக சவால்களின் அழுத்தங்கள் ஆகியவற்றால் நாடுகள் மோசமாகப் பாதிப்படைகின்றன.

இந்த நிலைப்பாடு சமூகங்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் பொருளாதார இடைவெளிக்கு வழிகோலுகிறது. ஆகவே, சமத்துவ வளர்ச்சியை எட்டு வதற்கும் 2012 டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட சாசனத் தைக் கடைப்பிடிப்பதற்கும் முன்னுரிமை வழங்குகின்றோம் - என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மக்களை

பேசிய ஜனாதிபதி, தாம் முன்வைக் கும் கருத்துக்களுக்கு மதிப் ப ளிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதற்கு வெளிநாட்டு ஊடகங்களின் நியாயமான உதவியும் அவசியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள சகல மக்களையும் பாதுகாக்கும் கடமையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் . இலங்கையில் உள்ள சகலருக்கும் சம உரிமைகள் வழங்கப்படும்.

சில விடயங்கள் தொடர்பில் நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 30 வருடங்களாக இருந்து வந்த பிரச்சினைகளுக்கு ஓர் இரவில் தீர்வுகளை காண முடியாது. இதற்கு காலம் அவசியம். ஒரு நபர் ஏற்றுக் கொள்ளும் தீர்வல்ல. சகலரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை வழங்க வேண்டும் என்பதே எனது தேவையாகும்.

மனித உரிமைகள், ஜனநாயகம் போன்ற பொதுநலவாயம் மதிக்கும் விடயங்களுக்கு இலங்கையும் மதிப்பளித்து வருகிறது. அதேபோல் இலங்கையின் சட்டத்துக்கும், அரசியல் அமைப்புக்கும் மதிப்பளிக்க வேண்டும் - என்றார். (த)

### 24 ஆவது

வதற்கு பொதுநலவாய அமைப்பு நேற்று தீர்மானித்துள்ளது.

குறித்த மாநாட்டை நடத்துவதில் இருந்து மொரிஸியஸ் விலகிக் கொண்டதையடுத்தே மோல்டாவுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது எதிர்பார்க்கப்படாத முடிவு என்று கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள மோல்டா நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோசப் மஸ்கட் தெரிவித்தார்.

மோல்டா ஏற்கனவே 2005 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தியுள்ளது .

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பிரச் சினையைக் காரணம் காட்டி, கொழும்பில் நடைபெற்ற 23 ஆவது உச்சி மாநாட்டில் மொரிஸியஸ் நாட்டு பிரதமர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

### வவுனியாவில்

யாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான கார்த்திகேசு நிரூபன் என்பவர் கடந்த 19 ஆம் திகதி வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது காணாமற்போயுள்ளார்.

இது தொடர்பாக பல தரப்புகளிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனைக் கண்டித்தும், காணாமற்போன ஆசிரியர் தொடர்பான விசாரணைகளைத்துரிதப்படுத்தி உண்மை நிலையை வெளிக் கொணர வேண்டும் என்று வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (த-400-421)

### வண பிதா

கணக்கானோர் கலந்து கொண்டனர். மெழுகுவர்த்திகளுடன் கண்டனப் பதாகைகளையும் அவர்கள் தாங்கி எதிர்ப்பு வெளியிட்டதுடன் செபமாலை வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

'எமக்கு நீதி வேண்டும்', 'எங்கள் குருவே எமக்குப் பாதுகாப்பு', எமது பங்குத் தந்தை தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்' போன்ற பதாகைகளை மக்கள் தாங்கியிருந்தனர். சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றது. (த-86)

### எச்சரிப்பதற்கு

என எம்மால் உறுதியாகக் கூற முடியும்.

பிரிட்டனில் நடைபெறவிருக்கும் தேர்தலில் தமிழர்களின் வாக்குகள் இவருக்குக் குறைந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை அரசு மீது சுமத்துவதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவருக்குத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கின்றதே ஒழிய தமிழர்களின் பிரச்சினையோ, மனித உரிமை மீறல்களோ கிடையாது. அத்துடன் இவரின் பேச்சையும் அரசு ஒருபோதும் அலட்டிக் கொள்ளாது. இவர் மட்டுமல்ல வேறெந்த சக்தியாலும் கூட இந்த அரசை அசைக்க முடியாது" என்றார். (த-சி)

# துப்பாக்கி சுடும் தேசிய அணிக்கு நெல்லியடி ம.ம.வி. மாணவிகள்








இலங்கை தேசிய துப்பாக்கி சுடும் அணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிறிசிதம்பரலிங்கம் தயானி, குமாரவேல் பிரதீபா ஆகிய இருவருமே இலங்கையின் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அண்மையில் அகில இலங்கை பாடசாலைகள் துப்பாக்கி சுடும் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட துப்பாக்கி சுடும் போட்டியில் சிறிசிதம்பரலிங்கம் தயானியும், குறிபார்த்து சுடும் போட்டியில் குமாரவேல் பிரதீபா, நித்தியானந்தன் சாமந்தி ஆகியோரும் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.
வட மாகாணத்தைச் சேர்ந்த மாணவிகள் துப்பாக்கி சுடும் அணிக்கு தெரிவு செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும். (ங-422)



## நாளைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தி வரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம் வருமாறு:
பிற்பகல் 3.45
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம். (23)

## தெரிவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 18
விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டு விழா எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.
மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி செவ்வாய், புதன்கிழமைகளில் மடுவில் இடம்பெறவுள்ளது. (ங-23)

## சண்டிலிப்பாய் கோட்ட உதைபந்து இறுதி நிகழ்வு



மாங்குளம், நவ. 18
சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் 3 ஆம் இடத்துக்கான போட்டியும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இதில் 14, 16, 18 வயதுப் பிரிவுகளுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதவுள்ளது.
3 ஆம் இடத்துக்கான போட்டியில் 14 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு இந்து கல்லூரி அணி மோதவுள்ளது. 16 வயதுப் பிரிவிலும், 18 வயதுப் பிரிவிலும் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ங-422)

# ஜெகநாதன் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், நவ. 18
அமரர் முத்துலிங்கம் ஜெகநாதனின் ஞாபகார்த்தமாக மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமானது. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:23 என்ற கணக்கில் முதல் செற்றை வசப்படுத்தியது.



ஆயினும் அடுத்த இரண்டு சுற்று ஆட்டங்களில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:18, 25:19 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.
இதனால் இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதல் இரண்டு சுற்றுக்களையும் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 25:11, 25:9 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றி பெற்றது.
மூன்றாவது இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் அமராவதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி முதல் இரண்டு செற்களையும் 25:11, 25:9 என்ற கணக்கில் சுவீகரித்து வெற்றி பெற்றது. (ங-23)

## மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், நவ. 18
முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி முகாம் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.
மேற்படி பயிற்சி முகாமினை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திலிருந்து வருகைதந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்றுவிப்பாளர் எம்.வடிவேல் வழங்கினார். (கு-23)



வடமாகாண கராத்தே சங்கம் நடத்திய கராத்தே சுற்றுப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றியீட்டி பதக்கங்களைப் பெற்ற சுண்டுக்குளி கிறின் பீல்ட் சனசமூக நிலையத்தில் கராத்தே பயிலும் மாணவர்கள், பயிற்றுநர் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகத்தினருடன் (23)

## யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 18
வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாப கார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்ஜீரா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், நவ. 18
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தம் யாழ்ப்பாணத்துச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் ஒவ்வொரு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (23)

## விளையாட்டு விழா நாளை

யாழ்ப்பாணம், நவ. 18
யாழ்.கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில்பிரதமவிருந்தினராகயாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி கலந்துகொள்வார். (23)

# ரோகித்தின் வெற்றிக்கு காரணம் டோனியே

இந்திய அணியின் இளம் வீரர் ரோகித் சர்மா இதுவரை 108 ஒரு நாள் போட்டியில் களமிறங்கி 3049 ஓட்டங்களை குவித்துள்ளார்.

அவர் இதுவரை 20/20 கிரிக்கெட்டில் 36 போட்டிகளில் விளையாடி 539 ஓட்டங்களையும் குவித்துள்ளார். எனினும் தனது முதல் டெஸ்ட் போட்டியில்

கடந்த 6ஆம் திகதி தான் காலடி வைத்தார். அத்தோடு முதல் போட்டியிலேயே சதம் அடித்து சாதனையும் படைத்தார். இந்திய அணிக்குள் நுழைந்த பின்னரும் டெஸ்ட் போட்டியில் அறிமுகமாக இத்தனை காலம் எடுத்துக் கொண்டாலும், இப்போட்டியில் சதம் அடித்த மற்றவர்களின் புருவத்தை உயர்த்த செய்தார். இதன் மூலம், நிதானமான ஆட்டத்திலும் அசத்துவேன் என அழுத்தமாக நிரூபித்தார். இது குறித்து இந்திய முன்னாள் அணித்தலைவர் கங்குலி கருத்து



வெளியிடுகையில், ரோகித் சர்மா அற்புதமாக செயற்பட்டார். இவரின் திறமை வெளிப்பட்டதற்கு டோனி தான் காரணம். 100 ஒரு நாள் போட்டியில் பங்கேற்று, ஒரு டெஸ்டில் கூட விளையாட முடியாத நிலையில் ரோகித் இருந்தார். பல நாள்களாக வாய்ப்பு மறுக்கப்பட்ட இவருக்கு, டோனி வழிகாட்டினார். இந்த வெற்றி முழுவதும் இவரையே சேரும். ஒரு அணியை வழிநடத்துவதில், பல்வேறு சவால்களை எதிர் கொள்ள நேரிடும். நான் இந்த பொறுப்பில் இருந்தபோது யாரையும் மகிழ்ச்சிப்படுத்தவோ அல்லது துன்பப்படுத்தவோ இல்லை. என் பணியைத்தான் செய்தேன். (ங)



இலங்கை அணிக்கு ஜெயவர்தனா, டில்ஷான் ஜோடி நல்ல தொடக்கம் தந்தது. ஜெயவர்தனா 46 ரன்களில் வெளியேறினார். டில்ஷான் (53) அரைச் சதம் கடந்தார்.

# வென்றது இலங்கை

## தொடர் சமநிலை

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில், இலங்கை அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில், டக்வேர்த் லூயிஸ் முறையில் வெற்றி பெற்றது.

இலங்கை சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டி மழையால் பாதியில் கைவிடப்பட்டது. இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி தம்புலாவில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் மில்ஸ் களத் தடுப்பைத் தேர்வு செய்தார். பலத்த மழை காரணமாக போட்டி 90 நிமிடம் தாமதமானது. இதனால், 33 பந்து பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

**டில்ஷான் அரைச்சதம்:**

இலங்கை அணிக்கு ஜெயவர்தனா, டில்ஷான் ஜோடி நல்ல தொடக்கம் தந்தது. ஜெயவர்தனா 46 ஓட்டங்களில் வெளியேறினார். டில்ஷான் (53) அரைச் சதம் கடந்தார். சங்ககாரா 'டக்-அவுட்' ஆனார். பின் வந்த திரிமான்னே (23), மத்தியூஸ் (0), சண்டிமால் (15) அணியை கைவிட்டனர். மற்ற துடுப்பாட்ட வீரர்களும் சொதப்ப, இலங்கை அணி 33 பந்துப் பரிமாற்றங்களில், 8 இலக்குகளை இழந்து 211 ஓட்டங்களை எடுத்தது. சேனநாயகே (21), ஹேரத் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர். நியூசிலாந்து அணி சார்பில் மெக்லினகன், நாதன் மெக்கலம், நீஷாம் தலா 2 இலக்கு வீழ்த்தினர்.

ஹேரத் துல்லியம்: நியூசிலாந்து அணியின் லாதம் (9), தேவ்சிச் (5) நீடிக்கவில்லை. இந்த நேரத்தில், ஹேரத் சுழலில் அசத்தினார். இவரிடம் நிகோல் (1), எலியாட் (3), ரோஞ்சி (23) சிக்கினர். முன்ரோ ஒரு ஓட்டத்தோடும் வெளியேறினார். நியூசிலாந்து அணி 25 பந்துப் பரிமாற்றங்களில், 6 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்கள் எடுத்த போது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி நியூசிலாந்து அணி 25 பந்துப் பரிமாற்றங்களில் 163 ஓட்டங்கள் எடுத்திருந்தால் வெற்றி என கணக்கிடப்பட்டது. ஆனால் நியூசிலாந்து அணி 126 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்ததால், தோல்வியடைந்தது. இலங்கை அணியின் ஹேரத் அதிகபட்மாக 3 இலக்குகளை வீழ்த்தினார். இலங்கையின் சேனநாயகே ஆட்ட நாயகன் விருது வென்றார். டில்ஷான் தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார். இதன் மூலம், 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் 1-1 என சமன் ஆனது. இரு அணிகள் மோதும் முதல் 20/20 போட்டி வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ங)

# மீண்டும் ஆனந்த் சறுக்கல்




உலக சதுரங்க சம்பியன் கிண்ண போட்டியின் 6ஆவது சுற்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் மீண்டும் தோல்வி அடைந்தார். இதனையடுத்து இளம் வீரர் கார்ல்சன், வலுவான முன்னிலை பெற்றார்.

சென்னையில் உலக சதுரங்க சம்பியன் கிண்ண போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நடப்பு சம்பியனான இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் (வயது-43) உலகின் முதல் நிலை வீரரான நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சன் (வயது-22) மோதுகின்றனர். மொத்தம் 12 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியின், முதல் நான்கு சுற்றுகளும் சமநிலையில் முடிவடைந்தன. ஐந்தாவது சுற்றில் ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். இதனையடுத்து கார்ல்சன் 3-2 என முன்னிலை வகித் தார்.

நேற்றுமுன்தினம் ஆறாவது சுற்று நடந்தது. இதில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், ராஜாவுக்கு முன் இருந்த சிப்பாயை இரண்டு கட்டம் நகர்த்தினார். மறுமுனையில் கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய கார்ல்சனும், ராஜாவுக்கு முன் இருந்த சிப்பாயை இரண்டு கட்டம் நகர்த்தினார்.

போட்டியின் 12ஆவது நகர்த்தலில் கார்ல்சன் தனது மந்திரியை வைத்து ஆனந்தின் மந்திரியை வீழ்த்தினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக 13ஆவது நகர்த்தலில் ஆனந்த் தனது சிப்பாயைக் கொண்டு கார்ல்சனின் மந்திரியை வெளியேற்றினார்.

ஆட்டத்தின் 40ஆவது நகர்த்தலில் ஆனந்த் தனது ராணியை வைத்து, கார்ல்சனின் ராணியை வெளியேற்றினார். இதற்கு பதிலடி கொடுத்த கார்ல்சன், தனது யானையை வைத்து ஆனந்தின் ராணியை அப்புறப்படுத்தினார். போட்டியின் 67ஆவது நகர்த்தலின் போது, கார்ல்சனின் கை ஓங்கி இருந்ததால், ஆனந்த் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து தொடர்ந்து இரண்டாவது வெற்றியை பதிவு செய்த கார்ல்சன் 4-2 என முன்னிலை பெற்றார். (ங)

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

2014 A/L
DAY CLASS
PHYSICS
PAST PAPER CLASS
(1994 - 2013)
MR. G.பிரபா
Mon , Thu, Fri
1.00 - 2.30
ஆரம்பம் :18.11.2013
Monday 1.00 P.m.


## சச்சினை வீழ்த்தி பெருமைபெற்ற வீரர்

தனது 200 ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் எடுத்து சச்சின் ஆட்டமிழந்தார். 200 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சினை ஆட்டமிழக்க செய்துள்ளார் மேற்கிந்திய தீவுகள் அணியின்தியோனரைன். மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான கயானாவைச் சேர்ந்தவர், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வீரர். இந்தியாவுக்கு எதிராகத்தான் இவர் ஒரு நாள் போட்டிகளில் அறிமுகமானார்.

30 வயதாகும் தியோனைரன், சகலதுறை வீரர் ஆவார். இடது கை துடுப்பாட்ட வீரர் மற்றும் வலது கை சுழற் பந்து வீச்சாளர் ஆவார். இதுவரை 14 டெஸ்ட் போட்டிகளில்தான் தியோனரைன் விளையாடியுள்ளார். அதேபோல இதுவரை இவர் வீழ்த்தியுள்ள டெஸ்ட் இலக்குகள் வெறும் 19 தான். இருந்தும், சச்சினை வீழ்த்திய பெருமைக் குரியவராக மாறி விட்டார்.

வெகு சாதாரண பந்து வீச்சாளரிடம் சச்சின் தனது கடைசிப் போட்டியில் வீழ்ந்திருப்பது ரசிகர்களை பெரும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.



## பெரடர், சானியா சச்சினுக்கு வாழ்த்து

பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஆகியோர் டெண்டுல்கருக்கு வாழ்த்து தெரிவித்து உள்ளனர்.

ரோஜர் பெடரர் கூறும்போது, சச்சினின் சாதனைகள் நினைத்துப்பார்க்க முடியாதவை. அடுத்த நிலைக்கு செல்லும் அவருக்கு எனது வாழ்த்துக்கள் என்றார்.

சானியா மிர்சா கூறும்போது, சச்சினின் ஓய்வு நாடு முழுவதும் உணர்ச்சி வசப்பட செய்தது. நாங்கள் அவரை இழக்கிறோம் என்றார். (400)


### மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும் பூச்சு சேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4 1/2 ரக்ரர் 17500 /=
தொடர்பு: கண்ணா
077 6766499, 0777590792

### போட்டோக்கொப்பி

கலர் பிறிண்ட் 5/=
A4 இருபக்கம் 1.80சதம்
A3 இருபக்கம் 3.50சதம்
கொழும்பு பிறிண்டேர்ஸ்
T.P : 021 221 7030, 0771974875
666 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

### www.thisaivisa.com

இன்று முதல் செயற்படத் தொடங்கியுள்ள எமது உத்தியோக பூர்வ இணையத்தளத்தில்
- எமது விசா ஆலோசனை வகைகள்
- எமது இயக்குநர் சபை விபரங்கள்
- 5/11/2013 எமது சந்தைப்படுத்தல் பிரிவினால் நடைபெற்ற மூத்த வீச்சான ஊடகவியலாளருமான திரு. வித்தியாதரன் அவர்களின் நன்றிகூறும் மாலை வேளை தொடர்பான நிழற்படங்கள் ஆகியவற்றைப் பார்வையிடலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
C/40233 0212219016, 0215689090

### CIMA

வளமான எதிர்காலத்திற்கு நம்பிக்கையான முதலீடு
OPERATIONAL LEVEL
MANAGERIAL LEVEL
OUR LECTURE PANEL

PO

K.SIVAGAR
- ACMA (UK) CGMA
- B.Sc (Hons) in Accountancy & Business Finance
- Experienced CIMA Lecturer
- Work exprince in Audit & Assurance and
- Consultancy (specially in banking and Finance Sectors)
- Excellent Pass Rates in the Past

EO

S. Abirami
- CIMA Passed finalist,
- Lecturer CIMA 3 years Experience.

FO

Rajaram Purusothamakuru
- Lecturer CIMA 2 yrs Experince
- Undergraduate University of Sri Jayewardenepura Department of Accounting (B.Sc. accounting)
- District first 2010 A`LEVEL in commerce

STARTS ON 30.11.2013 (Saturday)
SPECTRA SKILLS
No.19, STANLEY ROAD JAFFNA.
TEL - 021 222 1422/ 021 320 2728
(c/12299)(145.6.3)

### வெறுமனே 7 இலட்சம் போதும்

ஐரோப்பிய நாடான போலந்தில் படிக்க மாதம் 125000.00 உழைக்க உணவு இருப்பிடம் இலவசம்.
சட்ட ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்
0212219016,
0215689090

### Mobile Repairing

முழுமையான பயிற்சிநெறி
புதிய பிரிவுகள் 25.11.2013 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன
Duration - 1 1/2Months
வார நாட்களில் மாலை 4.00 - 5.30
4 days per week
அனுபவமிக்க ஆசிரியர் மூலம் தொழில்முறைப்பயிற்சிகள் வழங்கப்படும்
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு:
306. கண்டி வீதி, பூங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 0779122997
SoftTech

### உங்கள் வியாபாரத்தில் மந்த நிலை

- உங்களுக்குக் கடன் தருவார் எவரும் இல்லை ?
- மரபு ரீதியான சீட்டுப் போன்ற முன்னைய அவசரத்திற்குக் கைகொடுக்கும் கைங்காரியங்களும் பொய்த்துப் போய்விட்டன.

ஆனாலும் நீங்கள் சளைத்தவர்கள் அல்லவே ?

உங்கள் வியாபாரத்தை ஆஸ்திரேலியாவில் முன்னெடுக்க குடும்பமாக நிரந்தரமாக சட்ட ரீதியாகக் குடியேற ஆஸ்திரேலியா வணிகதுணை வகுப்பு விசா வகை 888 கை கொடுக்கின்றது. உங்களின் வணிகம் தொடர்பான ஆவணங்களுடன் எம்மை அணுகுங்கள்.

அடிக்குறிப்பு :
இவற்றிற்கு ஆலோசனை கேட்பதற்கு முன் ஆஸ்திரேலியா இணையத் தளத்தில் மேற்படி விசா துணை வகுப்பு 888 ஆய்வு செய்த பின் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: இதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

PO-75%

S.Kanisdda

### CIMA-UK November பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிற்கு வாழ்த்துக்கள்

பாடப்பரப்புகள் யாவும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. 5வருட கடந்தகாலப்பரீட்சை வினாக்கள் மற்றும் எதிர்பார்க்கை வினாக்களும் ஆராயப்பட்டுள்ளன. சென்றமுறை வெளியான பெறுபேற்றில் MCS நிறுவன மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளனர். இதன் மூலம் Managerial/ Operational மாணவர்களும் 100% சாதனை சித்தியைப் பெற்றுள்ளனர். இம்முறையும் எம்மாணவர்கள் அனைவரும் சித்தியடைவார்கள் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

### AL பெறுபேற்றின் அடிப்படையில் Certificate /Operational கற்கைநெறிகளிற்கு 100% புலமைப்பரிசில்கள்

AL பெறுபேற்றின் அடிப்படையில் Certificate /Operational கற்கைநெறிகளிற்கு 100%வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் <Name><CIMA><AL Year>< Result> என்பவற்றை 772 395 895 க்கு SMS செய்யவும். AL 2013 மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு திகதி 22 Nov 2013. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் MCS வளாகத்தில்

PO-74%

T.Sanjeevan


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.